

புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.
DUPLICATE

இந்துசாதனம்

விரோதிஞு (1889)
ஆவணிமீ ௨௨௳
ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)

யாழ்ப்பாணப்பட்டினம்:	ஞு ௧க்கு	ரூ. ௨-௨௫
வெளியூர், இந்தியா:	,,	ரூ. ௩-௭௫
தொடுவாய்ப்பகுதி:	,,	ரூ ௩-௭௫
தனிப்பிரதி	சதம்	-௦௫

விளம்பர விகிதம்.

		ரூ. ச.
முதன்முறைக்கு:—	ஒருகலம்	௭-௫௦.
,,	அரைக்கலம்	௪-௦௦.
,,	கார்கலம்	௨-௫௦.
,,	ஒரு அங்குலம்	-௫௦.

அடுத்தமுறைகட்கு டிவிகிதங்களில் அரைவாசி.

புத்தகம் — ௩௧ } யாழ்ப்பாணம்—ரௌத்திரிஞு ஆனிமீ ௪௳; ௧௯௨௦ம் ஆ ஜூன்மீ ௧௭௳. { இலக்கம்—௪௬.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாதி நூல்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவஞானத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப்பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சைதொழிலென்றுறுது
மதம்பூத்த விநாயகன்றன் கணங்கொழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பரம்.

சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நன்மைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, கோரஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுஸ்லி மிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீருள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், லங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இறாத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைறாத்தலுக்கு ரூபா ௧௦. கால் றாத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
1 நெ. 96 முதல் மருதானை, கொழும்பு.

ஜவுளிவிளம்பரம்.

M. R. PERUMALIER,
MANUFACTURER OF SWADESI CLOTHS,
West Tower Street, Madura,
(S. INDIA.)

எமது தொழிற் சாலையில் தற்கால நாகரீகத்திற்கு ஏற்ற விதமாக அநேக நூதன திணுசுகள் 100, 150, 200-ம் நம்பர் நூலில் ஜரிகையிலும், சாதாவிலும், வேஷ்டிகள், சால்வைகள், சவுக்கங்களும், இன்னும் பலவித இங்கிலிஸ் கலர்களில், ஜரிகைச் சேலை, சாதா சேலை, நாகணி மதுரை சுன்னடி புடவை, சித்தாடை, ரவிக்கை வகையராக்கள், ஜரிகையிலும், சாதாவிலும் தயார் செய்துவைத்தும், காசி (பெனாரிஸ்), பம்பாய், பூனா, சூரத், கல்கத்தா, காஷ்மீர், காக்கிநாடு, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், கோயம்புத்தூர், பெங்களூர், சென்னபட்டணம், ஆரணி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, செல்லூர், உப்பாடை, துயிலி, மலையாளம் முதலிய இடங்களில் தயாராகும் பட்டுச் சேலை, பளுக்காச் சேலை வகையரா சகலதிணுசுகளும் மொத்தத்தில் ஏராளமாய் வரவழைத்துவைத்து வியாபாரிகளுக்கும் மற்றும் சொந்தப் பாவிப்புக் காரர்களுக்கும் மொத்தமாகவும் சில்லறையிலும் சகாய விலைக்கு நேரில் கொடுத்தும் தபால் மூலமாய் வரும் கடிதங்களுக்கு போஸ்டு பார்சலாக சரக்கு அனுப்பிக்கொண்டு வருகிறோம்.

(1) திருப்தி யில்லாத சரக்குகளை திரும்பப் பெற்றுக்கொண்டு வேறுகோரும் சரக்கை மாற்றிக் கொடுக்க முடியும்.

(2) சகல ஆடரும் வி. பி. மூலமாக சரக்கு அனுப்பப்படும்.

(3) சிங்கப்பூர் பினாங்கு மலாக்கா முதலிய (S S) ஸ்ட்ரேயிட் செற்டில் மெண்டு நாடுகளுக்கும் வி. பி. யிலும் அனுப்பக்கூடும்.

(4) கோலாலம்பூர் சிலாங்கூர் முதலிய (F M S) பெடரேட்டெட் மலாய் நாடுகளுக்கும் தென் ஆபிரிக்கா மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கும் வி. பி. சட்டம் இல்லாததினால் போஸ்டல் ஆர்டர் மூலமாகவாவது மணியாடர் மூலமாகவாவது பணம் அனுப்பவேண்டும். பணம் வந்த பிறகு சரக்கு அனுப்பப்படும்.

(5) முற்பணம்அனுப்ப சவுகரியப்படாதவர்கள் சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய (S S)ஐச் சேர்ந்த போஸ்மாஸ்டர்கள்பேருக்கு பார்சல்களை அனுப்பும்படி எழுதினால் அனுப்புவோம். அவ்விடம் வந்து பணங்கட்டி பார்சல்களைப் பெற்றுக் கொள்ளலாம். இது மிகவும் சவுகரியமான ஏற்பாடு. அல்லது பாங்க் (Bank) மூலமாய் சரக்கு அனுப்பும்படி எழுதினாலும் அனுப்புவோம். உடனே பணத்தைக் கட்டி பார்சல்களைப் பெற்றுக் கொள்ளாத பக்ஷத்தில் சகலசெலவும் அவர்களைப் பொறுத்ததாகும்.

N. P. (a) ஜவுளி விலை விபரமடங்கிய காட்லாக் வேண்டுவோர் எமக்கு எழுதி இனாமாக பெற்றுக்கொள்ளலாம்.

(b) எல்லா ஆடர்களும் எம்முடைய நேர்பார்வையின் பேரில் அனுப்புவோம்.

தங்கள் ஆர்டரை எதிர் பார்க்கும்

மு. ரா. பெருமாள் ஐயர்,
சுதேச ஜவுளி வியாபாரம்,
மேலைக் கோபுரவீதி,
2 மதுரை. (இந்தியா).

சித்திரப் படங்களுடன் கூடிய

மானிடஜீவிய சிந்தாமணி

இப்புத்தகம் அமெரிக்காக் கண்டத்திலுள்ள அநேக அரிய பெரிய சாஸ்திரங்களையும் நமது பூர்வீக கிரந்தங்களையும் ஆராய்ச்சிசெய்து எழுதப்பெற்றுள்ளது. இதில் தேகத்திலுள்ள எலும்பு, சதை, நாடி, நரம்பு முதலியவைகளைப்பற்றியும், தேகத்திலுள்ள ஈரல், இரைப்பை, சுவாசப்பை, சிறு குடல், பெருங் குடல் மூளை முதலிய சரீர அமைப்பைச் சித்திரப்படங்களுடன் எடுத்துக்காட்டியும், தேகத்திலுள்ள ஒவ்வொருஉறுப்புகளும் செய்யும் வேலை முறைப்பாடும், அப்படிச் செய்யத் தவறின் அதற்குக் காரணமும், ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் ஒவ்வொரு ரோகங்களும் எத்தெத்தஸ்தானங்களிலிருந்து எவ்வெவ்விதமாய் உண்டாகின்றன வென்பதையும், அந்நோய்களுக்குப் பரிகாரமான இந்து, யூனனி, இங்கிலிஷ் முதலிய ஔஷதபாகங்களும், மருத்துவ சாஸ்திரம், சுகாதாரம், சிசுபரிபாலனம், பால்ய விவாகம், ஆண் பெண் சிசுஉற்பத்தி விபரம், ஆண் மலடு, பெண் மலடு முதலிய விபரங்களும், பாம்பு, தேள், நட்டுவக்காலி, வண்டுகடி முதலிய விஷக்கடிகளும் அவற்றிற்கான ஔஷத விபரங்களும், இன்னும் இவ்விடத்திற் சொல்ல முடியாத அநேக இரகஸ்யமான விஷயங்களும் கூடியது. இப்புத்தகம் கைக்கொண்ட ஸ்திரீ புருஷர்கள் வைத்தியரைத் தேடவேண்டியதில்லை. இதன் விலை ரூபா 2; பெதர்வெயிட் பேப்பர் பதிப்பு சலிக்கோபைண்டு விலை ரூபா 3. தபால்சார்ஜ் அணா 3. தொடுவாய்ப் பகுதிகளுக்கு தபால்செலவு அணா 6.

பிளேக், கலரா, மலேறியா முதலிய கொள்ளை நோய்களின் உற்பத்திவிபரங்களும் அவற்றிற்கான பரிகாரங்களும் விலை அணா 6.

F. M. S. மலாய்நாட்டிலுள்ளவர்கள் முற்பணம் அனுப்பவேண்டும்.

டாக்டர், எஸ். சந்திரசேகர்,
கும்பகோணம்.
3 இந்தியா.

ஜவுளி விளம்பரம்.

சுதேச ஜவுளிகள் விலைசகாயமாய்க் கிடைக்குமிடம் எது?

மதுரை எம். ஆர். வெங்கடாசலநாயுடு அன்டு சன்ஸ்

ஜவுளி கம்பெனியில் வாங்கலாம்.

நமது கம்பெனியில் தற்கால நாகரீகத்துக்குத் தக்கவாறு உள்ளூரில் புதுமாதிரியாகத் தயாராகும் 100, 150, 200-ம் நம்பர் நூலில் ஜரிகை வேஷ்டி ஜோடிகள், சால்வைகள், சவுக்கங்கள், பலவித இங்கிலிஷ் கலரில் ஜரிகைச் சேலைகள், சாதா டோரியா சுன்னடிச்சேலைகள் வகையராக்களும், சித்தாடை ரவிக்கைத்தினிசுகளும், காசி, பம்பாய், கல்கத்தா, பூனா, சூரத், காஷ்மீர், காக்கிநாடு, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், கோயம்புத்தூர், பெங்களூர், சென்னபட்டணம், ஆரணி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, செல்லூர், உப்பாடை, துயிலி, மலையாளம் முதலிய இடங்களிலிருந்து ஜவுளிகள் வரவழைக்கப்பட்டு ஸ்டாக் வைத்துக்கொண்டு சொற்ப லாபத்திற்கு வியாபாரிகளுக்கும், சொந்தப் பாவிப்புக்காரர்களுக்கும், தேவையான தினிசுகளை விரும்பிக் கேட்கும்வண்ணம் நேரில்வருபவர்களுக்கும், பிறதேசவாசிகள் வி பி.போஸ்ட் மூலமாக அனுப்பும்படி எழுதுவோர்களுக்கும் அனுப்பிக்கொண்டு வருகிறோம்.

தவிரவும், எங்கள் கம்பெனியில் பட்டுநாணயத்திற்கும், ஜரிகைக்கும் உத்தரவாதமாயிருப்பதால், பிறதேசவாசிகள் நம்பிக்கையாக ஏராளமான ஜவுளிகளுக்கு ஆடர்கொடுத்துவருகிறார்கள். ஒருமுறை உண்மையைச் சோதிப்பதற்காக எங்கள் விலைவிபர ஜாப்தா (Catalogue) வரவழைத்துச் சிறு ஆடர் கொடுத்து ஜவுளிகளின் சகாயத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

N. B. சிங்கப்பூர், பினாங்கு என்னுமிடங்களுக்கும் வி. பி. மூலமாகவும், மற்றும் வி. பி. சட்டமில்லாத F. M. S. என்னும் பெடரேற். மலாய், தென் ஆபிரிக்கா முதலிய தொடுவாய் இராச்சியப்பகுதிகளுக்கு ஆடருடன் முற்பணம் அல்லது போஸ்டல் ஆடர் அனுப்பவேண்டும். அல்லது பாங்கு மூலமாக அனுப்பவுங்கூடும்.

தமது ஆடரை எதிர்பார்க்கும்

எம். ஆர். வெங்கடாசலநாயுடு அன்டு சன்ஸ்.,
நாகரீக ஜவுளி கம்பெனி,
மேலைக்கோபுரவாசல்,
மதுரை.

M. R. V. NAIDU & Sons,
High Class Cloth Bazaar,
4 West Tower, Madura.

கவனியுங்கள்.

நயம் திணுசுகள்-சொற்பலாபம்-விலை சகாயம்.

பேர்பெற்ற கெட்டிச்சாய நூல்கம்பெனி எது?

மதுரை
மு. சு. ராமசாமிஐயர் கம்பேனியே.

ஐயா!

எங்கள் பேரில் பட்சமும் விசுவாசமுமுள்ள கனவான்களே, நமது கம்பேனியில் சொந்தப் பார்வையில் கைதேர்ந்த வேலைக்காரர்களால் அலிஜரைன் என்ற பீபாசாயத்தில் உற்பத்தியாகிறநாட்டுச்சிகப்பு, கெட்டிச்சாயநூல்களில் 10-ம் நம்பர் 16-ம் நம்பர் 20-ம் நம்பர் 22-ம் நம்பர் 24 ம் நம்பர் வரை. 1-ம் தரம் 2-ம் தரம் சாயங்களில் சுடர் அதாவது சுவர்ணம் கால் கப்பு அரைக் கப்பு முழுக் கப்பு நிறங்களில் சாயந்தீர்ந்த 10 இருத்தல் கட்டுகளும் டை கட்டு 18 அல்லது 24 கட்டுகள் கொண்ட பேல்களும் பாக்கிங் செய்யப்படும். 26-ம் நம்பர் முதல் 40-ம் நம்பர் வரை சிகப்பு நூல் வேண்டியவர்களுக்கு ஆடரின் பேரில் தயார் செய்து அனுப்பப்படும்.

சீமை பெண்ணிகறுப்பு மாதிரி கெட்டி கறுப்பு சாயத்தில் 10-ம் நம்பர் முதல் 16×20×22××2430×40,ம் நம்பர்வரை சாயம் தயார் செய்து 5 றாத்தல் கட்டுகளும் டை கட்டு 20 அல்லது 30 கட்டுகள் கொண்ட பேல்களும் பாக்கிங் செய்யப்படும்.

டை நூல்களின் விலை சகாயமாயும் இழைப்புக்கு சிதறில்லாமலும் நயமான நூல்கள் தயாராகின்றன. தேவையுள்ளவர்கள் 100-க்கு ரூபாய் 10—0—0 பத்து வீதம் அட்வான்சு அனுப்பி வி. பி. மூலமாய் ஆடர்செய்துகொள்ள வேண்டியது. டை பேல்களுக்கு பாக்கிங் செலவும் ரயில் சார்சும் பிரத்தியேகம். கம்பேனியாருக்கு பாத்தியமில்லை.

F. M. S. பெடரேரெட் மலாய நாடுகளில் இருப்பவர்கள் முன்பணம் அனுப்பி ஆடர்செய்ய வேண்டியது, சிங்கப்பூர் பினாங்கு என்ற இடங்களுக்கு வி. பி. போஸ்டு மூலமாய் அனுப்புவோம்.

நூல்விலை விபரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

எங்களுக்கு எழுதப்படும் ஒவ்வொரு லெட்டர்களிலும் தங்கள் விலாசம் தெளிவாகத் தெரியும்படி ஜில்லா தாலூகா போஸ்டு கிராமம் சமீப ரயில்வேஸ்டேஷன் கண்டெழுதியனுப்ப வேண்டியது. முக்கியமாய் தமிழில் லெட்டர்கள் எழுதியனுப்ப வேண்டியது.

இப்படிக்கு,
M. S. Ramaswamy Iyer,
Yarn Merchants,
Singara Topu Street,
5 Madura, S. INDIA.

ஔஷதவிளம்பரம்.

மகான்களே!

அடியிற் குறித்திருக்கும் நோய்களுக்கென்றே முறையாய் முடித்த ஔஷதங்கள் வேண்டியவர்கள் பின்வரும் விலாசத்துக்கு எழுதி தபால் மார்க்கமாகமாய் செலவுகட்டி அழைப்பித்து நோயில்லா வாழ்வைப்பெறும்படி வேண்டுகின்றேன்.

அவையாவன;—(1) நீரிழிவு, நீரடைப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு, நீர்ச்சிறுப்பு, என்னும் பிரமியரோகங்களுக்கும், மேகப்பகுதிகளுக்கும் (2) குன்மநோய்களுக்கும், (3) கோழை, கசம், இருமல முதலியவைகளுக்கும், (4) வாதப்பகுதிகளுக்கும், (5) தொய்வு, ஈளை, மந்தாரகாசம் முதலியவைகளுக்கும், (6) கபாலக்குத்து, கண்குத்து முதலியவைகளுக்கும், (7) குதகவாய்வுத் தொந்தங்களுக்கும், (8) உஷ்ணநோய்களுக்கும், (9) கட்டிடவைகள், (10) பாண்டுப்பருப்புகள், (11) பித்தரோகங்கள், (12) தேறுத சிறுவர்களுக்குமாகியவைகளே.

நோயில்லா வாழ்வைக்கூடிய சிக்கிரத்தில் தரக்கூடிய தகுந்தஔஷதங்கள் தயாராயிருக்கின்றன.

அவையாவன:—(1) குதசெந்தூரம், (2) ஜயகுலாநதசெந்தூரம், (3) ஆயகாந்தசெந்தூரம், (4) மிருத்தசஞ்சீவிமாத்திரை, (5) கஸ்தூரிமிருத்தியாதி, (6) கோரோசனைமிருத்தியாதி, (7) சந்திரோதயமாத்திரை, (8) மேகசஞ்சீவிகுழம்பு, (9) தாதுபுஷ்டிலேகியம், (10) மிருததசஞ்சீவி எண்ணெய், (11) நயனசாதனுதி, (12) கபாலசந்தனுதி, (13) சாகரோகமேகஎரணடத்தயிலம், (14) மெழுகெண்ணெய், (15) தானங்காயெண்ணெய், (16) புளியெண்ணெய்வகைகள், (17) மிருததசஞ்சீவிததயிலம்,——மருந்துகளுக்கு வேண்டிய சரக்குகளும், வீ, பீ, மூலமாயனுப்பி வைக்கத்தயாராயிருக்கின்றன.

சி. ஆறுமுகம்பிள்ளை,
திருஞானபண்டிதருக்காசவைத்தியசாலை,
6 சின்னக்கடைத்தெரு திருக்கோணமலை.

விளம்பரம்.

தேவாலயங்களுக்கு உபயோகமான திறம் பட்டுக்குடைகள், ஆலவட்டம், கொடி, சுருட்டி, ஜாலர், மகரதோரணம், காவடிசகலாத்து, முதலானவைகள் இந்தியாவில் சித்திரவேலைக்காரர்களால் செய்யப்பட்டு நமது சாப்பில் சகாயமான கிரயத்திற்கு கொடுக்க விருக்கின்றன. இன்னும் அவர் அவர்கள் கேட்கும் ஓடர்களுக்குத் தக்கமாதிரித்தயாரித்துக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

மு நாகலிங்கம்பிள்ளை
பறங்கித் தெரு,
7 யாழ்ப்பாணம்.

அடைவுநகை விற்பனவுவிளம்பரம்.

92

1893ம் ஆண்டின் 8 ம இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சுபெற்ற அடைவுபிடிக்கும் வண் மேற்கு அ. லெ. ராம. முத்துத்திருமேனி பிள்ளையிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்:—

நம்.	தே.	ரூபா.	அடைவுவைத்தவரின் ஊரும் பெயரும்.	அடைவுநகைகளின் விபரம்.
			1918-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம்	
798	12	130	மானிப்பாய் சிகுருநாதர் தியாகராசா	பொன் சங்கிலி 1ம் இரண்டு பட்டு சந்திரா மாலை
			செப்டம்பர் மாதம்	
860	18	50	சுதுமலை சின்னத்தம்பி காசிப்பிள்ளை	பொன்சிறு கெட்டிக்காப்பு சோடி 1
863	21	50	சோனகதெரு முகம்மதுத்தம்பி செய்துமுகம்மதுமரக்காயர்	பொன்பின்கொக்கி 1-ம் கெட்டிக்காப்பு சோடி 1ம் சம்பிமணிக்கோவை 1ம் மோதிரம் 1ம் அலுக்கத்து 3ம் முரிந்த அலுக்கத்து 3
			நவம்பர்மாதம்	
963	9	28	நாவாந்துறை சந்தியா செல்லையா	பொன் சிவப்பு கல்வைத்தமோதிரம் 1ம காதுப்பூ சோடி 1ம் வெள்ளியுடன் கவுத்தோர் 1
964	18	30	சோனகதெரு மீராசாகிபு காதர்முகியிதீன்	பொன் ஒருபட்டுமணிக்கோவை 1
969	20	30	,, முகியிதீன்சாகிபு அப்துல்காதர்	பொன்சவடி 1ம் அலுக்கத்து உருப்படி 4.
			டிசம்பர் மாதம்	
1014	16	200	திருநெல்வேலி ஆ. சின்னத்தம்பி,	பொ. சம்பிப்பூரானட்டியல்1ம் சரட்டட்டியல் 1ம் திருக்கண்டமாலை 1ம் கல்பதக்கம் 2ம் பெ.சிமிக்கி சோ.1 சிறுசிமிக்கி சோ.1
1021	20	25	சோனகதெரு அசனுமரைக்காயர் சுல்தானப்துல்காதர்	பொன் தாலிக்கொடி 1
1027	23	100	,, முகியிதீன் கண்டு முகம்மதுராசா	பொன்சவடி 1ம் 4பட்டுமணிக்கோவை 1
1038	28	35	,, செய்யதுமுகமது அசனுமரைக்காயர்	பொ.கெட்டிக்காப்பு சோ.1ம் தாயித்துகூடு மணிக்கோவை1ம், 10காசுகொண்டமணிக்கோ.1
			1919-ம் ஆண்டு ஜெனுவரிமாதம்	
1052	5	35	,, சின்னக்கடை பெரீதின் குருசுமுத்து	பொன் சரட்டட்டியல் 1
1054	5	35	சோனகதெரு முகம்மதுமீனுலெவ்வை முகியிதீன்பிச்சை	பொன் அலுக்கத்து உருப்படி 22
			பிபர்வரி மாதம்	
1119	3	30	மீசாலை கார்த்திகேசு அருணாசலம்	பொன் கொன்றைப்பூ 1-ம் மயிர்மாட்டி சோடி 1
1128	8	55	சோனகதெரு அப்துல்கனி செயினுபக்கிரி	பொன் அலுக்கத்து உருப்படி 30
			மார்ச்ச மாதம்	
1180	3	30	வண்கிழக்கு சின்னத்தம்பி நாகமுத்து	பொன் அரும்புத்தடை 6-ம் கொன்றைப்பூ 1
1187	10	25	நல்லூர் முத்தையர் செல்லக்குருக்கள்	பொன் சிறுகொலுசுக்காப்பு சோடி 1
1188	11.	20	வேலணைகிழக்கு வைரவி பொன்னம்பலம்	பொன் தாலிக்கொடி 1
1228	25	60	சோனகதெரு மதார்சாகிபு காதர்முகியிதீன்	பொன் சிறுபட்டணக்காப்புசோடி 1ம், கெட்டிககாப்பு சோடி 1
			ஏப்பிறல் மாதம்	
1244	1	90	சுன்னாகம் சின்னப்பன் வேலாயுதன்	பொன்பின்முகப்புடன் தாலிக்கொடி 1
1292	10	48	சோனகதெரு பூபக்கிரிமுகியிதீன் சேகுமுகம்மது	பொன் அலுக்கத்து 18-ம் மணி4-ம் பின்கோர்க்கி 3-ம் கொப்புசோடி 1
1304	14	55	,, முகம்மதுசுல்தார் சேகுமுகியிதீன்	பொன் அலுக்கத்து24-ம் 2பட்டுமணிக்கோ. 1
1313	17	25	,, முகியிதீன்சாகிபு அப்துல்காதர்	பொன் 2பட்டுமணிக்கோவை1
1337	25	50	வண்மேற்கு கனகசபை செல்லையா	பொன் பட்டணக்காப்பு சோடி1
1342	26	45	கந்தர்மடம் ஆறுமுகம் கந்தையா	பொன் சம்பிப்பூரானட்டியல் 1
1357	30	50	காரைதீவு சி. க. சண்முகம்பிள்ளை	பொன் சம்பிப்பூரானட்டியல் 1
			மே மாதம்	
1404	19	120	வண்கிழக்கு வல்லிபுரம் விசுவலிங்கம்	பொன் திருவில்லாத 40 காசுமாலை1
1406		35	சோனகதெரு முகம்மதுசதுரத்துல்லா முகம்மது அப்துல்காதர்	பொன் தட்டுத்தாலி உருப்படி 11
1407		60	,, செயினுமுகம்மதுலெவ்வை முகம்மது அத்துல்காதர்	பொ.5பட்டுமணிக்கோவை 1
1409		65	கைதடி மயில்வாகனம்சுந்தரம்பிள்ளை	பொன் தாலிக்கொடி சோடி1ம் நாட்டுவாளி சோடி 1ம் கெட்டிக்காப்பு சோடி 1ம்
1421	29	40	செட்டித்தெரு வைத்தியநாதர் மயில்வாகனம்	பொன் சிறுபட்டணக்காப்பு சோடி 1
1423		60	சுதுமலை இராமலிங்கம் கந்தையா	பொன்பட்டணக்காப்பு சோடி1
1424		50	சோனகதெரு சுல்தானப்துல்காதர் சுல்தான்முகியிதீன்	பொன்சவடி 1
			ஜுன் மாதம்	
1432	2	80	நல்லூர் கறுவல்த்தம்பி பொன்னையா	பொன்கொலுசுக்காப்பு சோடி1

விற்பனவு:—1920ம் ஆண்டு ஜுன்மாதம் 26ம் தேதிக்குச்சரியான ரௌத்திரி௵ ஆனிமீ 13உ சனிக்கிழமை பகல்பத்துமணிக்கு மேற்படி முத்துத்திருமேனிபிள்ளையின் கடையிலிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார் (வெண்டீஸ்மேஸ்தர்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைத் தானவரவு.

மட்டக்களப்பு ஸ்ரீ A. S. கந்தையா அவர்களின் அபரக்கிரியையில் அவருடைய மாதாவாகிய ஸ்ரீ சண்முகம்பிள்ளையவர்களின் மனைவியாரால் யாழ்ப்பாணஞ் சைவபரிபாலனசபைக்குத் தானமாக வுரித்தனுப்பப்பட்ட ரூபா 5 நன்றியறிதலுடன் பெற்றோம்.

க. இராசரத்தினம்.
தனாதிகாரி.

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்: ரௌத்திரி௵ ஆனிமீ சஉ.

உபாத்திமார் வேதனம். க.

அறியாமையென்னும் அந்தகாரத்தை யகற்றி ஞானச்சுடரை யேற்றுவதற்குக் காரணமா யிருத்தலாலும், "கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்குமூன்றுவிழி" என்றபிரகாரம் அகக்கண்ணைத் திறந்துவிடுதற்கு ஏதுவாயிருத்தலினாலும், அறம் பொருளின்பம் வீடென்னும் புருஷார்த்தங்கள் நான்கனையும் பயப்பதற்கு இன்றியமையாச் சாதனமா யிருத்தலினாலும் கல்விச்செல்வமே செல்வத்துட் செல்வமென எத்தேசத்தாராலும் எச்சாதியாராலும் எச்சமயத்தாராலும் அபிப்பிராயபேதமின்றி விதந்து சொல்லப்படும். இன்னோரன்ன சிறப்புவாய்ந்த கல்வியையூட்டுந் தொழிலாகிய உபாத்திமைத் தொழிலும் தொழில்களிற் சிறந்ததென்பது கண்கூடே. வித்தியாதானமே சிறந்த தானமெனப் பழைய நூல்களுங் கூறுகின்றன. இக்காரணங்கள்பற்றியே உபாத்தியாயரை எம்முன்னோர் ஐங்குரவருளொருவரெனவும், எழுத்தறிவித்தவனிறைவனாகு மெனவுங் கொண்டாடிவாராயினர். உபாத்தியாயர் - மாணாக்கர் என்ற விஷயத்தில் பழைய முறைகள் மாறிப் புதிய முறைகள் அநுசரிக்கப்பட்டமையால் உபாத்தியாயர்கட்கு முன்னிருந்தமரியாதை காலகதியிற் குறைந்துவரலாயதெனக்கூறத் துணிதல் பொருத்தமானதெனலாம். இக்காலத்துள்ள கல்வி முறை காரணமாக உபாத்தியாயர் தமது சுயாதீனமற்றுப் பாரதந்திரராயினர். இதனால் மாணாக்கர் ஆசிரியர்மீது வைத்திருந்த மதிப்புங் குறையத் தலைப்பட்டது. வித்தியாபகுதியார் விதிக்கும் நிபந்தனைகள் சரியானவையாயினும் பிழையானவையாயினும் அவற்றுக்கெல்லாம் உபாத்தியாயர் கட்டுப்படவேண்டியவரானார். பிள்ளைகள் கொடுக்கும் வேதனத்தையும், அரசினர்கொடுக்கும் உதவிநன்கொடைப் பணத்தையும் பெற்றுப் பின்னர் உபாத்தியாயருக்குக் கணக்குப்பார்த்துக் கொடுக்கும் வித்தியாசாலை அதிபர்கட்கும் உபாத்தியாயர் பயந்துநடக்கவேண்டியவரானார். இவற்றை நோக்கியே உபாத்தியாயர் முற்காலத்திற்போலன்றி இக்காலத்து மதிப்புக் குறைவுற்றாரென மேலே சொன்னோம்.

இனி மதிப்புக் குறைவுற்றாலும் உபாத்தியாயர் தக்க வேதனம் பெறுகின்றாரோவென ஆராயப்புகின் அதுவுமில்லையாம். இவர்கள் படுங் கஷ்டத்திற்கும் மூளைச் சிரமத்திற்கும் பதிலாக இவர்களுட் சிலர் பெறும் மாசவேதனம் அம்மாசத்துள் இருவாரங்கட்குச் சீவியஞ்செய்தற்குப் போதாமலிருக்க இவர்கள் வீடுகடோறுஞ்சென்று பாடஞ்சொல்லிக்கொடுத்து ஆறுதலின்றித் திரிவதை யாம் நேரிற் கண்டிருக்கின்றோம். சில கல்லூரிகளிற் கல்விபயிற்றும் உபாத்திமாரின் வேதனம், அக்கல்லூரியிற் சேவகவேலை பார்ப்பவரின் வேதனத்திலுங் குறைவாக விருப்பதை யாம் நேரிலறிவோம். உண்மையாக உபாத்திமாரின் நிலையை உற்றுநோக்குமிடத்தில் அவர்களை ஏணிக்குந் தோணிக்கும் ஒப்பிடலாம். எங்ஙனமெனில் ஏணி பலரையும் மேலே யேற்றிவிட்டுத் தான் சார்ந்த இடத்திலேயே இருக்கும். தோணியும் பிறரைக் கரையேற்றுவதன்றித் தான் ஒருபோதுங் கரையேறுவதில்லை. அதுபோல உபாத்திமாரும் எத்தனையோ பிள்ளைகட்குக் கல்வி பயிற்றி அவர்களைப் பிற்காலத்தில் உயர்ந்த உத்தியோக பதவியி லிருக்கச்செய்து தாம் பழையபடி சட்டம்பியாராகவே யிருக்கின்றார்கள். நிகழ்ந்த யுத்தங் காரணமாகப் பெரும் பஞ்ச முண்டாகி உணவுப் பொருட்களெல்லாவற்றிலேயேற, அரசாங்க உத்தியோகத்தர்கள் சம்பளமும் காலந்தோறும் ஏறிவரலாயிற்று. ஆனால் உபாத்தியாயர் பஞ்சகாலமாயிற்றே தம்முடைய வேதனத்தையுங் கொஞ்சங் கூட்டப்பெற்றுக்கொள்ளலாமே, அங்ஙனம் பெறாவிட்டால் காலங்கழித்தல் கஷ்டமாகுமே யென நினைத்து வித்தியாசாலையதிபரிடம் ஏதுங் கூட்டித்தரல்வேண்டுமென்று கேட்டால், அதிபர் சிலசமையங் கோபமடைந்து, "நீர்படிப்பித்தது நல்லாயில்லை; உம்மாலேதான் கிறான்றுப்பணம் இவ்வருஷங் குறைவலாயிற்று" என்னும் அபராதத்தை உபாத்தியாயர் தலையிற் சுமத்திவிட, அவர் "பிச்சைவேண்டாந் தாயே நாயைப் பிடி" என்ற யாசகன் போலாய் வேதனம் உயர்த்துவித்துக்கொள்ளும்பேச்சைத்தானும் நிறுத்திவிடுகின்றார். அந்த விஷயமாகப் பின்னும் ஏதும் பேசுவாராயின் அவர் அவ்வித்தியாசாலையில் மேலும் படிப்பிக்க வருமோ என்பது சந்தேகமாகிவிடும். உபாத்தியாயர் பஞ்சத்தின்கொடுமையால் உலுத்தத்தனமாக, ஏதும் வேதனங்கூட்டித் தரவேண்டுமென இரந்து நின்றாலும் உயர்த்தப்பெறும் வேதனம் ஒரு ரூபா அன்றேல் ௫0 சதம் என்னுந் தொகைக்கு மேற்படாது. விடுதிச்சாலையுள்ள பள்ளிக்கூடமாயிருந்தால் வேதனம் உயர்த்தும்படி கேட்ட உபாத்தியாயருக்கு விடுதிச்சாலையில் மத்தியானப்போசனம் பள்ளிக்கூடநாட்களில் பணமின்றி உதவப்படும். இங்ஙனம் யாங் கூறுவதெல்லாம் அற்பவேதனம் பெறும் கீழ்வகுப்பு உபாத்திமாரைக் குறித்தேயாம். இனி உயர்தரக் கல்வியுடைய உபாத்திமாரின் நிலைமை யேதென்றால் அவர்கள்நிலையும் அதிகம் விசேஷமல்ல. மேலும் அரசாங்க உத்தியோகத்தினர்பெறுவதுபோல 'பென்ஷன்' என்னும் ஆறுதல் வேதனம் இவர்கட்குக் கிடைப்பதுமில்லை. இவ்வுபாத்திமார் தேகசக்தி யுள்ளவரையில் கத்திவிட்டு இயலாதகாலத்தில் பள்ளிக்கூடத்தினின்றும் விலக,' கசம் முதலிய வருத்தங்கள் பெரும்பான்மையும் பீடிக்க, தேட்டமும் ஆறுதல் வேதனமுமின்றி அந்தியகாலத்தில் நிர்ப்பந்தமான சீவியம் நடத்தவேண்டியவராகின்றனர்.

உபாத்திமாரின் கஷ்டநிலைமையைநீக்கி அவர்களை நன்னிலையில்வைக்கவேண்டிய கடமை யுள்ளவர்கள் யாரென ஆராய்வோம். எந்த இராச்சியத்திற் கல்வி விருத்தியடைந்துவருகின்றதோ, எந்த இராச்சியத்தின்வருவாயில் கல்வியின்பொருட்டு அதிக பணஞ் செலவிடப்படுகின்றதோ, எந்த இராச்சியத்திற் பெரும்பாலான பிரசைகள் படித்தவர்களாக இருக்கிறார்களோ, எந்த இராச்சியத்தில் உபாத்திமார்கள் பெரிதுஞ் சன்மானிக்கப்படுகின்றனரோ அந்த இராச்சியமே உலகத்திலுள்ள இராச்சியங்களெல்லாவற்றுள்ளும் மிகநாகரீகப்படைந்ததெனச் சொல்லப்படும். பிரசைகளுடைய ஒழுக்கமும் அரசாங்கத்தாருடைய க்ஷேமமும் பிரசைகளின் கல்வியறிவிலேயே தங்கியிருக்கின்றது. பிரசைகளைக் கல்வியறிவுடையவர்களாக்கிவிடின் அரசினர்க்கு வருஞ் சங்கடம் யாதுமில்லையெனலாம். அரசினர் பணமுதவ, ஆசிரியர்கள் பிரசைகளைக் கல்வியில் விருத்தியடையச் செய்து நல்லொழுக்கத்தை யோங்கச்செய்து தீயொழுக்கத்தைக் கெடுத்துவிடுதலால் ஆசிரியர்கள் அரசினருக்குப் பெருந் துணையாளராக விருக்கின்றனர். ஆதலால் தமக்குப் பெருந் துணையாகவுள்ள ஆசிரியர்களை அரசினர் முட்டுற விடுதல் முறைமையன்றென்க.

அரசர் ஜெநந நாட் கொண்டாட்டத்திற் பட்டம்பெற்றவர்கள்.

வருடந்தோறும் நமது அரசசக்கரவர்த்தியின் ஜெநநநாட் கொண்டாட்ட தினத்தில் பிரித்தானிய சக்கராதிபத்தியத்தில் வசிக்கும் பிரசைகளுள் தக்கவர்களுக்குப் பட்டமளித்தல் சகசமாகும். இவ்வருடமும், குறித்த தினத்தில் யாழ்ப்பாணத்துள்ள தக்கவர்களுள் ஐவர் இப்பட்டங்களைப் பெற்றிருத்தல் எமக்குப் பெருமிதத்தையும் ஆநந்தத்தையும் விளைக்கலாயிற்று. இவர்களின் பெருந்தகைமையையும் பட்டமுதவப்பெற்றமை காரணமாக எமக்குண்டான மகிழ்ச்சியையுங் கூறுதற்கு இதுவே தக்க சமயமாகும். இந்த ஐவருள் அதிகாரம் என்னும் பட்டம்பெற்றவர் ஸ்ரீ க. மு. சின்னையா முதலியாரவர்கள். இவர் ஆனைக்கோட்டையை வாசஸ்தானமாக வுடையவர். நெடுங்காலம் யாழ்ப்பாணக் கச்சேரியில் இருப்பாக நியமனம்பெற்றிருந்து இளைப்பாறுஞ்சமயத்தில் அரசினரால் இராசவாசல்முதலியார்ப்பட்டமுதவிச் சன்மானிக்கப்பெற்றவர். சமயாபிமானம் சாதியபிமானம் தேசாபிமானம் பெரிதுமுடையவர்; பரோபகார சிந்தையுடையவர்; பட்சபாதஞ் சிறிதுமற்றவர்; ஆங்கில திராவிடபாஷை ஞானமுள்ளவர்; கமத்தொழிலிலும் மிக்க அநுபவம் படைத்தவராதலின் கமத்தொழிலைப்பற்றி யொரு நூலியற்றி வெளியிட்டிருக்கின்றார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நிர்வாகசபை யங்கத்தவருளொருவராக விருப்பதுடன், இப்பொழுது அக்கல்லூரியின் மானேசர் கௌரவஸ்ரீ அ. சபாபதியவர்கள் அசௌக்கியமாயிருப்பதால் அவர் பொருட்டு மானேசர் வேலை பார்த்துவருகின்றனர். யாழ்ப்பாணஞ் சைவபரிபாலனசபையின் நிருவாகசபை அங்கத்தவருள்ளும் ஒருவராயிருந்து அதன் நன்மைக்காக நன்கு உழைத்துவருகின்றவரான இவ்வுத்தமபுருஷர் சின்னையா அதிகாரம் என்னும் பெயருடன் சுகதேகியாய் நெடுங்காலம் வாழ்ந்து இன்னும் பரோபகாரச் செயல்களை நமது நாட்டிற்கு இனிது செய்யும் வண்ணஞ் சிவபிரான் திருவருள்பாலிப்பாராக.

ஸ்ரீ போல் சின்னத்துரை நிக்கலஸ்முதலியாரவர்கள்: இவர் யாழ்ப்பாணக்கச்சேரியில் 3வது உதவி எசன்றர் என்னும் உத்தியோகத்தைவகித்துள்ளவர்; தமிழருள் இவரே முதன்முதல் இவ்வுத்தியோகத்தைப் பெற்றவரெனலாம். இவரது நற்குண நற்செய்கையும் உண்மையுணர்ந்து கடைப்பிடித்தொழுகவேண்டுமென்னும் நியதியும் அரசவிசுவாசமும் கடமையிற் றிறம்பாமையுமே இவரை இவ்வுன்னத உத்தியோகத்திற்குக் கொடுவந்துவிட்டனவெனலாம். இவர் 32 வருடங்கள் வரையில் அரசசேவைபார்த்து வருகின்றார். இவரது திறமையைக் கண்டே அரசினர் இவருக்கு இராசவாசல் முதலியார் என்னும் பட்டத்தை யளித்தனர். இவரும் இப்பட்டத்துடன் சகல கண்ணியங்களையும் பெற்று இன்புற்று நெடுங்காலம் வாழும்வண்ணம் சிவபிரான் திருவருள் முன்னிற்பதாக. இவர் இப்போது மட்டக்களப்புக்கு உத்தியோகம் மாற்றப்பெற்றிருக்கின்றனரென அறிகின்றோம்.

இராசவாசல்முதலியார் ஸ்ரீ ம. சி. இராமலிங்கமவர்கள்: இவர் இப்பொழுது யாழ்ப்பாணக் கச்சேரியில் பிரதம முதலியாராக உத்தியோகம் வகித்திருப்பவர். முன்பின் 30 வருடங்களாக அரசினரின் கீழ் உத்தியோகம் வகித்துவருகின்றனர் இவர் கடமை பார்க்கும் திறமையையுணர்ந்த அரசாங்கத்தினர் சிலவருடங்கட்கு முன்னர் இவருக்கு முதலியார்ப் பட்டமளித்தனர். இப்பொழுது இராசவாசல் முதலியார்ப் பட்டமுதவி இவரைச் சன்மானித்தனர். நேர்மை முதலிய சற்குணங்கள் இவரிடத்துக்குடிகொண்டுள்ளன. இவர் இந்துக்கல்லூரி நிருவாகசபை யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபை என்னுமிரு சபைகளிலும் அங்கத்தவராயுள்ளனர். சிறியர் பெரியர் என்னும் பேதமபாராது எவருடனுஞ் சாந்தமாக ஊடாடியல்பினர். 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்னும் முதுமொழிக்கிலக்கியமாகவுள்ளவர். ஆங்கிலபாஷையை அழகுடன் பேசுந் திறமை வாய்ந்தவர். இவர் சகல செல்வங்களையுந் துய்த்து இன்புற்று இனிது வாழும்வண்ணஞ் சிவபிரான் திருவருள் புரிவாராக.

இருமரபுந்துய ஸ்ரீ செல்லப்பா இராசநாயக முதலியாரவர்கள்: இவர் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டிலே செக்கிறிற்றெறி உத்தியோகத்தமர்ந்துள்ளனர். ஏறக்குறைய 30 வருடங்களாக அரசினரின்கீழ் உத்தியோகம் வகித்திருக்கின்றனர். இவரது குணநிசயங்கள் ஏனையோராற் பின்பற்றத்தக்கன. உத்தியோகமமதை எட்டுணையு மறியாதவர்; ஏழைகளிடத்திற் பரிதாப சிந்தைகொண்டவர்; சமயாபிமானம் சாதியபிமானம் தேசாபிமானம் பாஷாபிமானம் என்னும் நான்கு அபிமானங்களும் நன்கு பூண்டவர்; இராமாயணம் முதலிய தமிழ் இலக்கியங்களைக் கற்றலையும் பழைய சரித்திர ஆராய்ச்சி செய்தலையுமே பொழுதுபோக்காக உடையவர். தமிழ்ப்புலவர்களைச் சன்மானிக்குங் குணம் இவர்பாற் பெரிதுமுண்டு. தமிழ்ப்பாஷையையும் சங்கீதத்தையும் விருத்தி செய்யும் நோக்கமாக எழுந்த யாழ்ப்பாணஞ் சரஸ்வதிவிலாச சபையை ஆரம்பித்துத் தளர்வின்றி நடாத்திவருபவருள் இவர் விசேஷமாக வைத்தெண்ணப்பட வேண்டியவர். மேற்படி சபையின் காரியதரிசியாயும், இந்துக் கல்லூரி நிர்வாகசபை யாழ்ப்பாணஞ் சைவபரிபாலனசபை என்னுமிருசபைகளிலும் அங்கத்தவராயுமுள்ளவர். தமது உத்தியோக கடமையைப் பார்ப்பதில் ஒருவகையான களங்கமுமில்லாதவராய் அரசினரால் முதலியார்ப்பட்டமுதவிச் சன்மானிக்கப்பெற்றனர். இவர் சடுதியில் சுப்பிறீங்கோட்டு றிஜிஸ்றாராக நியமனம்பெற்றுச் சென்ற திங்கட்கிழமை கொழும்புக்குப் பிரயாணமாயினர். இவர் இங்ஙனம் மாற்றப்பெற்றமை யாழ்ப்பாணத்திற்கோர் குறையெனலாம். இவர் மேலும் மேலும் பரோபகார செயல்களைச் செய்துகொண்டு இனிது வாழும்வண்ணம் சிவபிரான் கிருபை செய்வாராக.

ஸ்ரீ சரவணமுத்து வைத்தியநாத விக்கிரமசிங்கமுதலியார்: இவர் தேசாதிபதியின் தமிழ்த் துவிபாஷிக முதலியாராகவும், கொலோனியல் செக்கிறிற்றெறி கந்தோரில் தமிழ் துவிபாஷிகராகவுமுள்ளவர். தந்தை வழியால் விக்கிரமசிங்கமுதலியாருடைய மரபிலுள்ளவர், தாய்வழியால் நல்லூர் சரவணமுத்துப்புலவரின் வழித்தோன்றலாயுள்ளவர். இராசவாசல் முதலியாராகவும் தமிழ் வித்துவானாகவும் விளங்கிய ஸ்ரீ. கயிலாசபிள்ளையவர்கட்கு மகன்முறைபூண்டவர். அவர் பார்த்துவந்தவுத்தியோகத்தையே அவரின்பின் பார்த்துவருபவர் தமிழறிவும் அபிமானமும் பெரிதுமுடையவர். இப்பொழுது கடமையின் திறமை நோக்கி அரசினரால முதலியார்பட்டமுதவிச் சன்மானிக்கப்பெற்றனர். இவர் தமிழ்பாஷையைத் தமது முன்னோர்போல விருத்திசெய்துகொண்டு நன்கு வாழும்வண்ணம் சிவபிரான் அருள்புரிவாராக.

மெஸ். மோசேஸ் ஜே. பீ: இவர் யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் நெடுங்காலம் சக்கிடுத்தாராகவிருந்து சிலகாலமாக இளைப்பாறியிருக்கின்றனர், இவர் நிஷ்களங்கமான மனதுள்ளவரென்றும், அன்பு பொறை அடக்கம் முதலிய அருங்குணம் வாய்ந்தவரென்றும் எல்லாராலும் புகழ்ந்துகொள்ளப்படுபவர். இவரின் விசேஷ குணங்களைமதித்தே இவருக்கு அரசினர் ஜே. பீ. யென்று சொல்லப்படும் சமாதான நீதிவான் தத்துவப்பட்டமளித்து சன்மானித்தனர் இவர் போன்றவர்களே இப்பட்ட அதிகாரத்தில் நியமனம்பெறத் தக்கவர்களென்பதற்குச் சந்தேகமில்லை. இவர் மிக்க கண்ணியத்துடன் நெடுங்காலம்வாழும்வண்ணம் கடவுள் ஆசீர்வதிப்பாராக,

சமாச்சாரம்.

நமது தமிழ்ப் பத்திராசிரியர்:—இவ்விந்து சாதனப்பத்திராசிரியராகிய ஸ்ரீ. P. கார்த்திகேய பிள்ளையவர்கள் வயிற்றுழைவாற் பீடிக்கப்பட்டு இப்பொழுது யாழ்ப்பாணம் பெரிய வைத்தியசாலையிலவைத்துச்சிகிச்சைசெய்யப்படுகின்றனர் இவர் விரைவிற் சுகமுற்றுத் தமது கடமையைச் செய்யும்வண்ணம் சிவபிரானருள் செய்வாராக.

இலங்கைப் புகைரதப்பகுதி:—கழிந்த யுத்தகாரணமாக இலங்கைப் புகைரதப்பகுதியில் 1917-ம் ஆண்டு பல மாறுதல்களுண்டாகி அநுசரிக்கப்படலாயின. ஆனால் இப்பொழுது அவற்றையெல்லாம் நீக்கி, யுத்தம் ஆரம்பித்தற்குமுன்னர், புகைரதப்பகுதியிற் பிரயாணிகட்கு என்னென்னவசதிகளிருந்தனவோ அவற்றையெல்லாம் மீளவும் அநுசரித்தற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

யாழ்ப்பாணம் சரஸ்வதிவிலாசசபை:—யாம் முன்னர்த்தெரிவித்தபடி இச்சபையார் சென்ற சனிக்கிழமை முற்றவெளிநீதிமண்டபத்தில், இராமாயணம அயோத்தியாகாண்டத்தை, ஸ்ரீ. சின்னையா அதிகாரமவர்கள், இராசவாசல் முதலியார் ஸ்ரீ. இராமலிங்கமவர்கள், இராசவாசல் முதலியார் ஸ்ரீ. நிக்கலஸ்அவர்கள், ஸ்ரீ. இரசநாயகமுதலியாரவர்களென்னும் இந்நால்வரனுசரணையிலுஞ் சமுகத்திலுமரங்கேற்றினர். அத்தருணம வடமாகாண ஏஜண்டரவர்களும் பாரியாரும் கச்சேரி உதவிஉத்தியோகத்தர் மெஸ். பிறசாத்தவர்களும பாரியாரும் விசேஷமாகச் சமுகஞ்செய்தனர்.

ஜர்மனியருக்கு அரிசி:—எஸ். எஸ். கிளான் என்னுங் கப்பல் றங்கூனிலிருந்து அரிசியேற்றிக்கொண்டு ஜர்மனிக்குப் போகும் மார்க்கத்தில் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்தது. இக்கப்பல் 7000 தொன் நிறைகொண்ட அரிசியேற்றிச்செல்கின்றதாம்.

ஆகாயரதப்பிரயாணம்:—றங்கூனுக்கும் பம்பாய்க்குமிடையே தினமும ஆகாயரதமூலமாகப் போக்குவரவு செய்தற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. இதற்காகிய ரதங்கள் சில வாரத்துள் தருவிக்கப்படும் இவ்விரதங்கள் றங்கூனிலிருந்து பம்பாய்க்குப்போதற்கு 26 மணித்தியாலமும் 25 நிமிஷமும் செல்லுமாம். போகும்மார்க்கத்தில் அக்கியாப், சித்தக்கொங், டெய்க்கா, கல்கத்தா முதலிய இடங்களில் தங்கிச் செல்லுமாம்.

தேகவியோகம்.

யாழ்ப்பாணம் வியாபார சமுதாயத்தலைவரும் இங்குள்ள பெரிய தனவந்தர்களி லொருவருமாகிய மெஸ் உவில்லியம மேதரவர்கள் சென்ற வெள்ளிக்கிழமைகாலை யாத்திராப்பிரகாரம தேகவியோகமாயினரெனவறிந்து அனுதாபமுறுகின்றேம்.

காருண்ணியம்நிறைந்த ஐந்தாவது ஜோர்ச் அரசரவர்களின் ஜெனனதினக் கொண்டாட்டம்.

நங்காருண்ணியம் நிறைந்த ஆங்கில அரசரவர்களின் ஜெனனதினமாகிய ஆனிமாசம் 3-ந்திகதியாகும் குருவாரத்தன்று கல்லடி உப்போடை விவேகானந்த விதாலய வித்தியார்த்திகளால் ஓர் பெரிய கொண்டாட்டம் நடத்தப்பட்டது.

காலை 8 30 மணியளவில் விதாலய வித்தியார்த்திகள் பலவர்ணதுவஜவகைகளைப் பிடித்தவர்களாய் எங்காருண்ணிய அரசரை ஞாபகப்படுத்தற்காய் ஆலயத்தின் வெளிப்பிரகாரமத்தியில் நிறுவப் பட்டிருந்த ஆங்கில ஐக்கிய துவஜத்தை வலமாய்ப் பவனிசெய்து தாங்கள் இராஜபக்தியுடையோராய் என்ஞான்றுமிருக்கிறார்கள் என்பதற்கறிகுறியாய் இலகுறும தங்கள் வந்தனத்தை அத்துவஜத்துக்கே சமர்ப்பித்தனர்.

பின்னர் 10 30 மணியளவில் ஆலயதரிசனஞ்செய்து தங்களரசரவர்களின் வாழ்நாள் பூரணமுள்ளதாயிருக்கவும், அவருடைய செங்கோல் என்ஞான்றும் நிலைபெற்றுள்ளதாகவும், அருள்பாலிக்குமபடி ஈசுரனை கோரிப் பிரார்த்தனை செய்தபின் தங்களில்லங்களுக்கேகினர். பின்னர் சாயரட்சை 3 மணியளவில் விதாலய வித்தியார்த்திகளுமாத்திரமன்று வளர்ந்த ஆடவர்களுக்குமாகப் பலவித விளையாட்டுக்கள் நடைபெறலாயின. அத்தருணத்தில் கிராமவாசிகளாண எண்ணிறந்தோர் சமுகங்கொடுத்து அகமகிழ்ந்து சென்றனர். பின்பு சுமார் 6 30 மணியளவில் விளையாட்டுகளில் முதன்மைப்பிள்ளைகள் காளையர்முதலிய யாவர்க்கும பல பரிசுகளளித்து வித்தியார்த்திகளால் இராசபக்தியைக் குறித்தனவான மனனப்பிரசங்கங்களும், சம்பாஷணைகளும் வித்தியாசாலைத் தலைமை ஆசிரியரால் அக்கொண்டாட்டதினத்தையும் அது நடத்தப்படவேண்டிய அவசியத்தையும்பற்றி ஓர் உபந்நியாசமும் நடத்தப்பெற்று கூட்டம் சமாப்தியெய்தவே சமுகங்கொடுத்தோர் யாவருக்கும் பல சிற்றுண்டிகளளிக்கப்பட அவர்களவற்றை யருந்தி எங்கள் மாட்சிமைதங்கிய அரசரவர்களுக்காசி கூறித் தங்கள் இல்லங்களுக்கேகினர். ஷடித.

தந்திச் சமாச்சாரம்.

பேர்சியா,

பொல்ஷவிக்ஸ் என்செலியென்னுமிடத்திற்குப் புதிய சைநியங்களை அனுப்புகின்றனர். பொல்ஷவிக் கட்சியாருள் 300 பேர் றெஸ்த் என்னுமிடத்தைப்பிடித்தனர். ஆங்கிலர் றெஸ்த் என்னு மிடத்தைவிட்டுப் பகடாட்டிற்கு அகன்றனர். றெஸ்த் என்னுமிடத்தில் நின்று சமர்செய்த இந்தியசைநியத்திற் சிலர் பகைவராகிய பொல்ஷவிக்ஸ் சாதியாருடன் சேர்ந்துவிட்டனராம்.

சிரியாவுக்கணித்தாக ஆங்கிலருக்குரிய இடங்களில் அராபியர் குண்டுப்பிரயோகஞ் செய்கின்றனர். மெஸ்பொற்றேமியாப் பகுதியிற் கலகங்கள் நிகழ்கின்றன. யூபிரேத்திஸ் நதியின்மேல்பாகத்தில் 400 அராபியர் ஓர் இடத்திற் கூடிநின்றபோது ஆங்கில ஆகாயகமனிகள் அவர்கள்மீது வெடிகுண்டுப்பிரயோகஞ்செய்தனர். மொசூல் குர்ட்ஸ் என்னுஞ் சாதியார் ஆங்கிலருக்குரியார் சிலரைக் கொன்று ஒரு கிராமத்தையு மழித்து, ஒரு பொலிசர் ஸ்தானத்திற்சென்று அங்குள்ளவர்களை நிராயுதராக்கிப் புகைரதப்பகுதியார் சிலரையுந் தாக்கினர்.

இத்தலியகப்பற்காரர் சிறைப்படுத்தப்பட்டமை.

பொல்ஷவிக்ஸ் இதா என்னும் இத்தலிய குருயிசர்க்கப்பலிலிருந்த சிலகப்பற்காரரைச் சிறைப்படுத்தினர். இவர்கள் பாற்றும் என்னுமிடத்திற் காவலாக நியமனம்பெற்றுநிற்கின்றனர்.

அயர்லாந்து.

காவற்பொலிசர் கலகக்காரரில் 100 பேருடன் எதிர்த்து அவர்களுட்பலரை வெடிமருந்தோடும் மற்றும் யுத்தகருவிகளோடும் துவிசக்கரங்களோடும் சிறைப்படுத்தினர். தங்கள் பக்கத்தில் முன்னர் சிறைப்படுத்தப்பட்டவர்களில் அநேகர் மீட்கப்பட்டனர்.

ருஷிய கலகம்.

ருஷியாவில் தலைமைவகித்துவந்த றிறெட்ஸ்கி என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டாரென்றும, லெனின்என்பவர் ஓட்டம்பிடித்தார் என்றும் தந்திச்சமாச்சாரம் சொல்லுகின்றது. புதிஸ்லோவே இப்பொழுது புதிய அரசியல் நடத்த லாயினராம்.

பொல்ஷவிக் கலகத்தால் ருஷியாவில் இதுவரை 8500 பேர்வரையில் தூக்கிட்டுக் கொல்லப்பட்டனராம்.

கடிதம்.

சாமர்த்தியம்.

மனிதர் தொடங்கிய காரியங்கள் அனுகூலப்படுவதற்குக்காரணம் அவரவருடைய சாமர்த்தியமேயாம். காலம், இடம் முதலியவற்றிற்கேற்ற சாமர்த்தியத்தால் காரியசித்தி சுலபமாகும். இங்ஙனம் சமயோசிதமான சாமர்த்தியமே சாதுரியமெனபது. "இருளைப்போட்டு வாரலை யிழுப்பதும்", 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வதும்' சாதுரியமாகும். "கல்லைக் குத்துவானேன் கை நோகுதென்று அழுவானேன்" என்று சும்மா விருப்பதும், 'மௌனங் கலகநாஸ்தி' என்று சில சமயங்களிற் பேசாமலிருப்பதும சாமர்த்தியமே, "கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்தவிடத்து" என்று பெருநாவலர் கூறியதும் இதுவே. "வினையால் வினையாக்கிக் கோடல், யானையால் யானையாத்தற்று" என்றபடி "தண்ணீர் இறைக்க அழைத்துக்கொண்டு போய் பெண்ணைக்கொள்ள முடிவுசெய்வதும்" சாதுரியமேயன்றோ? இவ்வித சாதுரியங்கள் லௌகிக ஸ்திதிக்கு இன்றியமையாதன. இத்தக்குணம் சிலருக்கு இயற்கையிலே அமைந்திருக்கும். எல்லாரியல்புகளு மறிந்து ஒவ்வொருவரிடத்திலும் மரியாதை தவறாமல் உபசாரமாக ஒத்துநடப்பது கஷ்டமல்ல. அதனால் நஷ்டமொன்றுமில்லை. எல்லாருக்கும் மகிழ்ச்சியையே பயக்கும். பணத்தால் விளையாத பலநன்மைகள் இதனால் விளையும். இங்ஙனம் எல்லாருக்கும் மகிழ்ச்சியுண்டாகும்படி நடப்பதை இளமையிற்றானே பழகிக்கொள்ளவேண்டும். வயது முதிர்ந்தபின் இத்தப்பழக்கம் உண்டாவது மிகுந்த துர்லபம். வேறுதுறைகளில் விசேஷ திறமையில்லாதவர் அநேகர் இவ்வித ஆசார உபசாரங்களால் லௌகிக சித்திகளை மிக்க இலகுவாக அடைந்து வருகிறார்கள். இவைகளை அனுசரிக்காதவர்கள் பலவழிகளிலும் மிக்க திறமை வாய்ந்திருந்தும், வீணாக விரோதிகள் ஏற்பட்டு இடர்ப்படுவோராகின்றனர். மற்றவர்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி நமக்குஞ் சந்தோஷத்தையே உண்டாக்குவது அனுபவத்திற் பிரத்தியக்ஷமாகும். இங்ஙனம் யாவர்க்குமொப்ப ஒழுகுவதையே நாயனார் பண்புடைமையென்பர். இங்ஙனம் ஒழுகுவதில் முக்கியமாய்க் கணிக்கத்தக்க உபாயங்களுள் சம்பாஷணையும் ஒன்று. யார் யாரோடு எதையெதை எவ்வெவ்வளவு பேசலாமென்பதறிந்து, நமக்குரிய வரம்பிலே நின்று பேசவேண்டும். பேச்சின் நிமித்தமாக உபயோகமற்ற வார்த்தைபேசுவது குற்றமாக முடியும். அதைக்காட்டிலும் ஒன்றும்பேசாதிருத்தல் மிகவும் நன்மை. அடியோடு மூகைபோலப் பேசாமலிருப்பதும் உசிதமல்ல. ஒருகாரியம் ஆவதற்கும் பேச்சேகாரணம். ஆகையால் முன்பின்பார்த்து மிதமாய்ப் பேசவேண்டும், வழ வழ என்றுபேசாமல் பட்டுக்கத்தரித்ததுபோல ஒழுங்காய்ப் பேசப்பழகவேண்டும். எப்பொழுதும் நாம் சொல்வதை மற்றவர்கள் கவனிக்கும் விதமாகச் சொல்லவேண்டும். வித்தியாமமதை, திரவியமமதை முதலிய ஏதுக்களால் நாம் சொல்வதைக் கவனிக்காமல் பராமுகமாயிருப்பார் சிலருமுண்டு; நாம் அதைப் பாராட்டாமல் விடுவதே நன்மை. மற்றவர்கள் சொல்வதை நாம் எப்போதுங் கவனமாய்க் கேட்கவேண்டும். கவனமாய்க் கேட்பதினால் அவர்களிடமிருந்து அநேக உபயோகமான விஷயங்களைக் கிரகித்துக்கொள்ளலாம்.

நாம் ஒன்றையுஞ் சிந்தைசெய்யாது பராமுகமாயிருக்குஞ்சமயம்பார்த்து ஏதோ ஓர் விஷயத்தைக்கேட்டு, நாம் வெளியிடலாகாத ரகசியத்தைச் சிலர் கிரகிக்க முயல்வர். ஆதலால் வினவிடைகளைக்கொண்டு அவர்களுடைய நோக்கத்தை உள்ளபடி அறிந்தே வெளியிடக்கூடிய விஷயங்களை வெளியிடவேண்டும். மற்றவைகளை அடக்கிவைக்கவேண்டும். கடாட்ச வித்துவான்களுடைய கவிகளின் ஆழத்தையுங் கண்டறியலாம்; மனிதருடைய மனத்தின் ஆழத்தை உள்ளபடிகண்டறிவது எளிதன்று. "நீராழங்கண்டாலும் நெஞ்சாழங்காண முடியாதென்பர்" மேலோர். உலகத்தில் உள்ளும் புறமும் ஒத்திருப்பவர் மிகச்சிலரே. அநேகர் நெஞ்சில் நினைப்பது ஒன்று, வாயினாற் சொல்வது வேறொன்றாக இருக்கும். ஆகவே வார்த்தையால் ஒருவருடைய மனத்தை அறிவது அசாத்தியம். வார்த்தையின் தன்மையைக்கொண்டு மாத்திரமே ஒருவனை நாம் சத்துருவென்றும், மித்துருவென்றும் கொள்ளலாகாது, "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம், கடுத்ததுகாட்டு முகம்" என்று பொய்யாமொழியார் கூறியிருப்பினும், பன்னெடுங்காலம் வஞ்சனையிற் பழகி முதிர்ந்தவர்களை முகத்தான்மாத்திரம் அறிவது எளிதன்று. முகத்தைக்காட்டிலுங் கண்தான் ஒருவன் கருத்தை நன்குணர்த்தும்.

"பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின், வகைமையுணர்வார்ப் பெறின்"

என்னும் நாயனார் கூற்றுப்படி, மிக்க விவேகம் உள்ளவர்கள் கண்ணின் குறிப்பால் கருத்தையறியலாம். அங்ஙனம் அறிந்து அவரவர்களுக்கு ஏற்றவிதமாகவார்த்தைசொல்லுவது காரியசித்திக்கு அனுகூலமாகும். கோபத்தால் ஒருவர் நம்மைப் பார்த்து வெட்டெனப் பேசினாலும், நாம் பொறுமையோடு சாந்தமான வார்த்தை சொன்னால், அவர் சீற்றந் தானே தணிந்துபோகும். கோபத்துக்கு இடங்கொடுத்தால் காரியக்கெடுதி யுண்டாகும். பயமுறுத்தியும், பலாத்காரம்பண்ணியும் முடியாதகாரியங்கள், நயவசனத்தால் ஆகும். காரணமின்றிப் பரிகாசவார்த்தைகள் பேசிச் சிநேகபங்கம் உண்டாக்கிக்கொள்வது பேதமை. இனி வேறு சில சாமர்த்தியங்களையும் ஆராய்ந்து பார்ப்போம்.

படாடம்பமுற்றவர்கள் தம்மிடத்தி லில்லாத திறமையும்இருப்பதாக நடிப்பர்; அவர்களுடைய வாய்ப்பகட்டைக் கண்டு அஞ்சுவது புத்தியல்ல. எல்லாவழிகளிலுந் திறமைமிக்க சிலர் வெளிதோற்றப் பொலிவின்றி அடக்கமாயிருப்பர்; இவர்களை அவிவேகிகளென்று கருதி இகழ்வது முறையல்ல. அவர்களோடு கூடிப் பழகும்போதுதான் அவர்களுடைய திறமையின் நிதானம் நமக்கு நன்கு புலப்படும். நம்மை விவேகிகளாகப் பாவித்துக்கொண்டு, வெளிப்படையாக ஒருவனை மூடனென்று அவனிடம் எவ்விதத்திலுங் காட்டிக்கொள்ளுதலாகாது. நம்முடைய அபிப்பிராயம் பிசகாயிருப்பினுமிருக்கலாம். அப்படியிருப்பின் அவன் நம்மை முழுமகன் என்று எண்ணிக்கொள்ளுவான். எடுத்துக்கொண்ட காரியம் இனிது முடியுமென்று ஒருபோதும் உறுதியாக நம்பியிருத்தலாகாது. நன்மையான காரியங்களைத் தொடங்கும்போது, இடையில் அதற்கு எண்ணற்ற இடையூறுகள் வந்து குறுக்கிடுவது சகசம். காலகதியால கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற் போகிறதுமுண்டு. தருணம் வாய்த்தபோதே தக்கபடி காரியத்தைமுடித்துக்கொள்ளவேண்டும. "தூண்டிற்காரனுக்குமிதப்பிலேகண்" தருணம் வாய்க்கும்வரையில் தூங்காமற் காத்திருக்கவேண்டும். "தூங்கினவன் கன்று கடாக்கன்று" என்பர். மனுஷனுடைய சுபாவத்தை யூகித்தறிவது மிகவும் உபயோகமான வித்தை. மற்றெந்த வித்தைகளிலும் இது குறைந்ததன்று. நம்பத்தகுந்தவர் இன்னார், தகாதவர் இன்னார் என்பதோடு, நம்பத்தக்கவரை எவ்வெவ்விதத்தில் எவ்வெவ்வளவாக நம்பலாம் என்பதையும் ஆராய்ந்து உணர்ந்துகொள்ளுவது முக்கியம். இங்ஙனம் உணர்வது எளிதன்று இதற்கு உலக அனுபவம் அதிகம் வேண்டும். நமக்கு உடந்தையாய் வேலைசெய்பவும், நமக்குக்கீழே வேலைசெய்பவும் தகுந்தவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்வது பிரதானம். ஒருவனிடத்தில் சந்தேகமிருந்தால் அவனைத் தன் வேலையில் அமர்த்திக்கொள்ளக்கூடாது. அமர்த்திக்கொண்டபின் அவன்மீது சந்தேகங்கொள்ளவேண்டாம். ஒருவன்மீது, வைத்தால் முழுநம்பிக்கையும் வைக்கவேண்டும். தொடக்கத்தில் முன்பின் பாராமல் நம்பிவிடுகின்றவர்களே மோசம்போகின்றவர்கள். ஒருவருக்கொருவர் நம்பிக்கையில்லாவிட்டால் எவ்வித காரியமுஞ் சித்தியாவதில்லை ஒரு அற்ப காரியமானலும் நன்றாக ஆராய்ந்துபார்த்தே அதில் அடியிடவேண்டும். "ஆய்ந்தோய்ந்து பாராதான் காரியம் தான்சாந் துயரந்தரும்." "நுண்ணிய கருமமும் எண்ணித் துணி" என்றார் ஔவைப்பிராட்டியார். எந்தக்காரியத்திலும் ஆத்திரப்படுதலாகாது. ஆத்திரமடைந்தாலும், அதை வார்த்தையாலும், செய்கையாலும் வெளியிடலாகாது. "ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு." "பதறாத காரியஞ் சிதறாது" "நாடறிந்தபார்ப்பானுக்குப் பூணூலேன்" என்று இருக்கலாகாது. பிரபஞ்ச நாடகத்தில் அவரவர்களுக்குரிய வேஷம் அவசியமே. இரக்கப் போனாலுஞ் சிறக்கப் போகவேண்டும். "உடுத்தாரை உண்டி வினவுவாரில்" என்றார் பெரியோர். வெளிச்சீர் உட்சீரைக் காட்டும் கண்ணாடி. டம்பாசாரியாய்த் திரியவேண்டுமென்பதல்ல. ஒழுங்காக உடுப்பது போதும். நம்மைக் கவனித்துச் செய்யவேண்டிய காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவைகளைச் சரியாக நடத்துவதே கஷ்டம். அப்படியிருக்க, பிறர் முயலுவதான காரியங்களில் பிரவேசிக்கும்படி நாமே வழிதேடுவது உசிதமல்ல. நம்முடைய உதவியைவிரும்பினால், நம்மால் இயன்றதைச்செய்ய வேண்டும்; இல்லாவிட்டால், அழையா வீட்டுக்கு நுழையாத சம்பந்திபோல நம்முடைய காரியங்களை நன்குகவனித்துக்கொண்டிருப்பதே நமக்கு அழகு.

இங்ஙனம்.
ச. வைத்தியலிங்கபிள்ளை,
வண்ணைநகர்.

மைத்திரேயி அல்லது ஓர் பூர்வீக மஹா பண்டிதை.

(வேதசம்பந்தமான சரித்திரம்.)

பூமிதேவியின் அழகுவாய்ந்த முகமேயென்ன பாரதகண்டத்தின் கண்ணே, மிதிலையெனப் பெயர் பெற்றதாகிய நன்னாட்டிற் பல பதிகளுள்ளன. அப்பதிகளில், தனக்கெதிரில்லாது விளங்குகின்றதும், தேவர்நாட்டிற் சிறப்புற்று விளங்கும் அமராவதியை ஒத்ததுமாகிய ஜனகபுரமென்னுமோர் நகருமுளது.

அந்நகரின் கண்ணேவசிப்பவர்களாகிய மூவர், ஓர்நாள், கீழ்கடலிற் றோன்றிய சூரியனது கிரணங்கள் மென்மையாக வீசுகின்ற முற்பகலில், ஓர் வெளியிடத்திலிருந்து தங்கள் ஜன்மநகராகிய ஜனகபுரத்தை நோக்கிச் செல்வாராயினர். அவ்வாறு செல்பவருள், இருவர், குற்றமில்லாத க்ஷத்திரிய மரபினரும், கட்டமைந்த வில்லையேந்திய காத்திரமுடையவரும், சுசரங்களடங்கிய அம்பறாத்தூணியைப் புறத்திலே தாங்கினவரும், உறையிற் பிரகாசிக்கின்ற வடிவாள் யாப்புறப்பெற்றுத் தொங்குமிடையினை யுடையருமாகக் காணப்பட்டனர். மற்றொருவர் பரிசுத்தத்தையும் தாழ்மையையுங்காட்டும் உடையையும், சாந்தமும் ஜீவகாருண்யமும் நிறைந்து விளங்குகின்ற வதனத்தையும் குற்றமில்லாது இன்பத்தைக்கொடுக்கின்ற இனிய பேச்சையு முடையவராய், மேன்மை பொருந்திய ஞானசாஸ்திரங்களை யுணர்ந்த ஓர் பிராமணோத்தமராய்க் காணப்பட்டார். இறுதியிற் கூறிய அவ்வந்தணர் மித்திரனென்னும் பெயருடையவர், அரசர்க்குரிய சகல லக்கணங்களு மமையப்பெற்று இருநிலத்தை நீதிவழுவாது பரிபாலனஞ்செய்யும ஜனக மகாராஜனின் உயிர்த்துணையாகிய மந்திரியாவர்.

உடல் மூன்றாகவிருப்பினும், உயிரொன்றென்று கண்டோர் எண்ணுமாறு ஐக்கியப்பட்டு, உருவொன்றிய மனசையுடையவர்களாகிய அவர்கள், தங்கள் உள்ளத்திலுள்ள அன்பாகிய வெள்ளம் வாயினின்றும பிரவாகிப்பதையொப்ப இன்சொலிற் பின்வருமாறு சம்பாஷிப்பாராயினர்.

அவர்களுள் ஒருவன், "மித்திரநாமவேதியனே,
'அடுத்ததுகாட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்ததுகாட்டு முக'

மென்னும் பழமொழிக்கேற்ப, உனது முகமானது, உன் மனதில் ஏதோ மாறுபாடிருக்கின்றதெனக் காட்டுகின்றது. அஃதென்ன? சொல்லுவாய்" எனலும், தேன்சுரக்கும் பூமாலையையணிந்த மித்திரமுனிவர் கூறுகின்றார், "யாகதத்தனே, உனக்கும் விட்டுணு தத்தனுக்கும், யான் மறைப்பது யாதாயினுமுண்டோ: இல்லை.

சிலநாட்களுக்கு முன்னே, தேயமெங்கணும் நிறைந்த அறிவினையுடைய மேதாவிகள் ஒருங்கு சேர்ந்து ஓர் சபை கூடினர். அச்சபையில் அஷ்டதிக்குகளிலும் தங்கள் கீர்த்தி நிறைவதினாலே மேம்பாடுபெற்றவர்களாகிய கல்வியறிவிற் சிறந்த புலவர்கள் எல்லாரும், சொற் சுவையினாலும், பொருட் சுவையினாலும், கேட்பவர்களது நெஞ்சம் விருப்புறத்தக்க பிரசங்கங்கள் பலபுரிந்தனர். அவ் வுபந்நியாசங்கள் எல்லாவற்றுள்ளும், பலவகைப்பட்ட கல்வியாகிய இமயமலையை உருக்கிச் சிறுகத்திரட்டி ஓர் கையாற் பந்துபோலெறிந்து விளையாடுகின்றவளும், காண்போர் மனத்தை உருக்கும் அழகு வாய்ந்தவளுமாகிய கார்க்கியென்னும் மகா பண்டிதை, எழுமுகில் சென்ற கருங்கடலை முகந்து, பூமியானதுமறைய, உத்வேகத்தோடும் பெய்யும் முதன்மழையையொப்பவும், சபையின்கண் இருந்த மேதாவிகள் மூக்கில் விரல்நுனி சேர்த்து ஆச்சரியப்படும்படியாகவும் தத்துவசாஸ்திர விஷயத்திற் பல ஆக்ஷேபங்கள் தொடுத்துப்பொழிந்த பிரசங்கமும், கீர்த்திபெற்ற முனிவராகிய யாஞ்ஞவல்கியர் அவ்வினாக்களுக்கெல்லாம் அதி சாதுரியமாக உத்தரமளித்துச்செய்த பிரசங்கமுமே ஏனைய உபந்நியாசங்கள் அனைத்திலும் சிறந்து விளங்கின.

மயலற்ற யாஞ்ஞவல்கிய முனிவர் முப்பது வயசினராகவிருப்பினும், வயது முதிர்ந்த அருந்தவருமடையாத ஞானத்தையு முடையவர். சிவபக்தியும், சகல சீவராசிகளிலுமன்பும், சத்தியம் முதலாகிய சற்குணங்களும் ஒருருவாக அவதரித்தென்னப் பூமியிலுதித்தவர், ஆகாயத்திற் செல்லுகின்ற களங்கமில்லாத சந்திரனை நிகர்த்த முகத்தை யுடையவர், அவரே தவ சிரேஷ்டர், அவரே மகா பண்டிதர், அவரே யோகி, அவரே ஞானி, அவரே சற்குணக் குன்றம், அவரே அழகுக்கு இருப்பிடம், ஆடவர்களுக்குள்ளே சிரேஷ்டமானவர், திலகம் போன்றவர், தர்க்கத்தின் கண்ணே வாதிகளுக்கெல்லாமோர் சிங்கம்போன்றவர். இவ்வாறாய இவரை எண்ணும்போதெல்லாம் என்னுள்ளம் ஆற்றொணாத் துன்பமடைகின்றது என்று மித்திரர் என்னும் வேதியரானவர் சொன்னவுடனே, யாகதத்தன், "பிரமதேவரைப்போல் மேன்மைபொருந்திய, மித்திரனென்னும் வேதியனே, அந்த யாஞ்ஞவல்கியரை நினைத்திடலால் உனது மனம் மாறுபடக் காரணமென்னை? கூறுதியென்னலும், மித்திரநாம வேதியர் கூறுகின்றார்: "எனது நண்பனே, கேட்பாயாக, பெரியதவங்கள் பல புரிந்து யான் பெற்றெடுத்த புள்ளினிற் கடிபோலும் வெள்ளிய முறுவலையும், பூரண சந்திரன்போலும் வதனத்தையுமுடைய மைத்திரேயியினது விவாக காரியம் என்னுள்ளத்தை வருத்துகின்றது. அவளும் பதினெட்டாண்டுப் பருவ மெய்தினள். ஆகையால் அவளுக்குக் கடிமணஞ் செய்யத்தகுந்த காலம் இதுவாகலின், தோற்றத்தினாலும், செல்வத்தினாலும், குலத்தினாலும், பருவம் முதலிய நலத்தினாலும், ஞானசாஸ்திர வுணர்ச்சியினாலும் அவளுக்கேற்றவனாகிய ஓர் ஆடவனுக்கே அவளை அக்கினிசாக்ஷியாக வதுவைசெய்து கொடுக்க இச்சித்தேன்" என்றார்.

இதைக்கேட்ட யாகதத்தன் கூறுகின்றான், அப்படி இச்சித்ததினு லுள்ளக்கவலை யாது காரணம்பற்றி யுண்டாகவேண்டும்?

"மாலட்சுமிதேவி செந்தாமரைப் புஷ்பாசனத்தை நீங்கி திருவடி நிலத்திற் பொருந்தும்படி பூமியில்வந்தவதரித்தாற்போன்றவளாகிய உனது மகளை, உயர்தவக் கொழுந்தை, கல்விக்கடலின் அளவை அதி பால்யத்திலேயே கண்டுணர்ந்த வித்துவச்சூடாமணியினை, அறிவிற்சிறந்த வித்துவான்கள் கூடுஞ்சபைகளில், பாற்கடலிற் றோன்றிய அமிர்தத்தைச் செவியிலள்ளி யூற்றுவதுபோல மிகச்சிறந்த உபந்நியாசங்கள் புரியும் வாக்குவல்லபமுடைய பெண்கள்நாயகத்தை வதுவை செய்வாரில்லையென்றோ நீ வருந்துகின்றாய்?

செவ்விய இதழையுடைய தாமரைச் செழுமலர்க்குப் பொருத்தமாகப் பாந்த இருளையகற்றும் பல்கிரணங்களுடைய சூரியனைப் படைத்தவாறுபோலவும், ஆம்பர்புஷ்பத்தைப் படைத்துக் குளிர்ச்சிபொருந்திய ஒளியையுடைய சந்திரனைப் படைத்ததுபோலவும், உனது அலைகடற்பிறவா அமிர்தமாகிய மைத்திரேயியைக் கொடுத்த, வில்லையொத்த நெற்றியையுடைய உமாசமேதராகிய முக்கண்ணர், அவளுக்குப் பொருத்தமாகிய ஓர் ஆடவனைப் படைக்கவில்லையென்றோ நீ வருந்துகின்றாய்", என்று கூறினன். (தொடரும்.)

இங்ஙனம்,
K. செல்லம்மாள்,
பிரவேச பண்டித வகுப்பு,
ஸ்ரீ. ராமநாத வித்யாலயம்,

ஒரு விளக்கம்.

இந்துசாதனபத்திரிகையில் சஙு-ம் இலக்கத்தில், ஸ்ரீ. க. வைத்தியலிங்கபிள்ளை யவர்களால், வெளிப்படுத்தப்பெற்ற வாதசம்பந்தமான விஷயமொன்றில், என்பெயரும் சம்பந்தப்பட்டதாக சிலர் விளக்குதலின், அவ்விஷயமாக யான் கூறவேண்டியதொன்றுளது.

ஷெ பிள்ளையவர்கள் தமது வாதியைக்குறித்து எழுதிய சந்தர்ப்பத்தில், மகாலிங்கசிவமூர்த்தியை அடித்துக் கேட்கலாகாதா என்று கூறினதாம். குறித்த மூர்த்திக்குப் பொருள் யானென்று, பிள்ளையவர்களாகுதல், பிறராகுதல் மனங்கொள்ளின், தருக்கவலவாதிகட்கு எதனைப் போதிப்பதற்கும் யான் அனர்கனென்றும், இத்தகைய சம்பந்தத்தில் எனது நாமத்தைச சாயாக்ஷரணஞ் செய்தமை அனுசிதமாகுமென்றும் பெருமையுஞ் சிறுமையு மின்னவா றெனக்கெய்தல் வேண்டாவென்றும் வெளிப்படுத்துகின்றேன்.

சோ. மகாலிங்கசிவம்.

தமிழ்க் கல்வி.

நந்திவ்விய ஆபரணமாகிய தமிழ்ப்பாஷையின் மகிமையை எம்மைப்போன்ற கோடிகிரர்கூடினு மோரணுவளவேனும் சிறப்பித் தாற்றேமாயினும் நாம் சமதாசர்தர்க்கிசைய முயற்சிசெய்து அதனை வளர்த்து விளக்கிக் காக்கவேண்டியது தமிழ்மக்களாகிய எம்மீது பொறுத்த கடமையாயிருக்கின்றது.

முதலாவது நாம் கவனிக்கவேண்டிய இடம் யாதென்றால், தஞ்சிறுவர்க்கல்விகற்பிக்கும் வித்தியாசாலையும் அதன் சிருமே.

அளவிலா விலையுயர்ந்த நவ சிலாத்தினங்கள் மலிந்துபொலிந்துநிலவுகின்ற நந்திவ்விய தமிழ்ப்பாஷையைக் கற்பிக்க வழுக்குருமார் பூரணஆற்றலுடையவராகவு மவரை ஸ்தாபிக்கச சகல புறவிஷயங்களுக்கும்வேண்டிய பொருளுதவியினு மதிகமான பொருளுதவியை சம்மனோர் எக்காலமும் உதவ ஆயத்தப்படவேண்டும்.

ஆ தமிழ்மாதே, ஜெகத்திக்கு நிகரான உத்தமியே, சௌந்தரி, லக்ஷ்மி, சரஸ்வதி, ஞானபூஷணி, உன் பூஷண தாசர்க்கு நிகர் எப்புவியிலுஞ் சொல்லப்போமோ? எதுகுறைவுளதோ? உன தளவிடற்கரிய நித்திய பொக்கிஷங்களை யனுபவித் தானந்திக்க விதியற்ற பாமரர் புறபாஷைகளையே சதிவீணரா யழிகின்றனரென் றுசதா துயரப்பட்டயர்கின்றனையோ? அம்மா, ஆறியிரு. தாயே, அவைர்க்கு முன் துயரத்தைச் சொல்லுகிறேன்.

சைவவித்தியாசாலைக ளென்று பெயருக்கு மாத்திரங்கட்டி அவரவர் வறுமைக்கேற்ப கேவலம் 5அல்லது 6 ரூபா சம்பளத்திற்கு ஏற்படிப்பு எட்டிலொருபங்கு படிப்புள்ளவரான உபாத்திமாரை வைத்து, பாஷையை விர்த்தியாக்குதலெங்ஙனம்?

ஆணும் பெண்ணும் அனைவரும் கல்வியை விடக் கவனிக்கவேண்டிய முக்கியவிஷயமெது? தலைவிஷயமாகிய இதனைத் தாழவிட்டாமல் நஞ்ஞாதியுய்வெத்தன்மையதோ?

நம் முன்னோர் மதத்துவத்தை யார் மறக்கக்கூடும்? அத்தன்மையாய மதத்துவத்தை யெய்தி இம்மைமறுமைப் பயன்களையடையப் பிரியமில்லையா? நஞ்சமயமும் பாஷையு மொன்றல்லவா? சமயகர்த்தாவே பாஷையின் கர்த்தாவு மாகுனே.

ஆதலால் ஒவ்வொரு கிராமத்திலும் கிராமத்திற்கேற்ப ஒன்று, இரண்டு, அல்லது மூன்று வித்தியாசாலை யுடையதா யிருக்க வேண்டும். அத்துணைத்தாய ஒவ்வொரு வித்தியாசாலைக்கும் ஒவ்வொரு பாண்டித்தியம் பெற்ற குருவாகுதல் நியமிக்கப்படவேண்டும். அவர்களுக்கேற்ற மானியத்தைக் கிராமத்தாருதவவேண்டும்.

சிவானந்தபோகமும் உலககாலக்ஷிக்குமுபாயமுமாகிய இருவிஷயமுமே புணர்த்தற்குரியவைகளாகும். இவைகளைத் தேர்ந்த குருவும், தோப்பக்குவமாணுக்கருஞ்சேர்ந்து வாழுமிடமே வித்தியாசாலையாகும்.

தமிழ் மக்களே விழியுங்கள். நம்மதத்துவம் நம்மைவிட்டு முற்றாய் விலகிப்போகுமுன்னமே உய்யும் வழிதேற்ற விடாமுயற்சி செய்து நந்தமிழ்மாதையும் சைவமதத்தையும்போற்றுவோம் புறப்படுமின்.

இங்ஙனம்
தமிழ் மகன்.

விளம்பரம்.

கோகாலைப்பிரிவில் இக்குறவா, உரிமலுவா என்னும் இடங்களிலுள்ள அரசினர்மகமதிய தமிழ்ப்பாடசாலைகளுக்கு உபாத்தியாயர்களாகியமிக்கவேண்டும். உருடவிகிதசம்பளம் ரூபா 240/- அதனோடு, நூற்றுக்கு 45 வீதமாக அப்பாலத்துக்குரிய வர்த்தமானபணமும் கொடுக்கப்படும். விருப்பமுள்ளவர்கள், தங்கள் தங்கள் வித்தியாசாமர்த்தியங்களையும் குறித்து, வித்யாதிகாரத்துரையவர்களுக்கு, விண்ணப்பம் அனுப்பவேண்டும்.

ஏ. என். நாறிஸன்,
பிரதிவித்யாதிகாரி.
வித்யாசம்ஸ்தானம்,
கொழும்பு. 6. 20. (88)

பேசல்மிசன்ஓடுகள்.

உலகப்பிரசித்திபான இவ் வோடுகள் புதிதாய் அழைப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஓடுகள் குணநிசயங்களை நன்குணர்ந்தவர்களாயுள்ளவர்களால மற்றைய ஓடுகளிலும் திறமானவையெனக் காணப்பட்டிருக்கின்றன. தட்டோடுகள், முகட்டோடுகள், அரைவோடுகள், காற்றோடுகள், தளவரிசைக்கற்கள் முதலியன இப்போது இருப்பிலிருக்கின்றன.

William Mather & Sons,
Agents
Basel Missien,
Tile Works.

8

சிவபூதராசப் பெருமான் கோவில்.

நிகழும் ரௌத்திரிஸு வைகாசிமீ 19உ இரவு 7-மணி வரையில், சுன்னாகம் தெற்கின்கண் எழுந்தருளியிருக்கும் சிவபூதராசப்பெருமான் கோவில் மண்டபத்தில் சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்புலவரவர்கள் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் ஒரு சபைகூட்டப்பட்டது. அக்கிராசனர் அச்சமயம் சிவபுண்ணியத்தைப்பற்றி ஒரு பிரசங்கஞ் செய்தனர். பின்னர் அவ்வாலயத் திருப்பணியை முற்றுவித்தற்கும் மற்றும் ஆக வேண்டியமுயற்சிகளைச்செய்தற்கும் ஆலோசனை செய்து அதற்கு மானேசராக ஸ்ரீ வே. பூதப்பிள்ளையவர்களையும், உபமானேசராக ஸ்ரீ சு. காசிப்பிள்ளை யவர்களையும், தொடுவாய் இராச்சியப் பகுதிகளிலும் மற்றும் பகுதிகளிலுமுள்ள புண்ணிய சீலர்களிடம் பொருள சேர்ப்பதற்கும் தனாதிகாரியாகவும் எம்மையும் இன்னும் தசசங்கத்திற்கு அங்கத்தவர்களாக கஉ மாசப்பூசை உபயகாரர்களையும் நியமனஞ்செய்தனர் இச்சபையிற் கூடியிருந்து நியமனஞ்செய்தவர்கள் ஸ்ரீமத் ச. சதாசிவக்குருக்கள், சுன்னாகம் சமஸ்கிருதவித்தியாசாலைத் தலைமை உபாத்தியாயர் ஸ்ரீ வி. சிதம்பரநாதசாஸ்திரிகள், சபாநாயகரவர்கள், ஸ்ரீ மு. வைத்தியநாதரவர்கள், உடுவில்விதானை ஸ்ரீ கா. மூத்தப்பா அவர்கள், தொடுவாய்ப்பகுதியில்வேலையாயிருந்து ஆறுதற் சம்பளம் பெறும் ஸ்ரீ ம. செல்லமவர்கள், மேற்படியூரில் வேலைபார்த்த ஸ்ரீ கு. அப்புத்துரையவர்கள், கந்தரோடை ஆங்கில வித்தியாசாலைத் தலைமை உபாத்தியாயர் ஸ்ரீ நா. சின்னத்தம்பியவர்கள், மேற்படி வித்தியாசாலை உபாத்தியாயர்கள் ஸ்ரீ வே. செல்லப்பா அவர்கள் ஸ்ரீ க. சோமசுந்தரமவர்கள், ஸ்ரீ சி. பொன்னம்பலமவர்கள், பிறக்கிறுசியார் ஸ்ரீ தி. குமாரசுவாமியவர்கள், மயிலணி உபாத்தியாயர் ஸ்ரீ ம. பொன்னு அவர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உபாத்தியாயர் ஸ்ரீ மு. சபாரத்தினசிங்கமவர்கள், உடுவில் ஆங்கில வித்தியாசாலை உபாத்தியாயர ஸ்ரீ கு. சிவசம்பு அவர்கள், ஸ்ரீ அ. காசிப்பிள்ளையவர்கள், சுதேசவைத்தியர் ஸ்ரீ சி. செல்லப்பா அவர்கள், ஸ்ரீ சி. சின்னப்பு அவர்கள், ஸ்ரீ வே. சங்கரப்பிள்ளையவர்கள் ஸ்ரீ ஆ. சுவாமிநாதரவர்கள், ஸ்ரீ மு. கனகசபையவர்கள் ஸ்ரீ அ. கனகசபையவர்கள் ஸ்ரீ வே. சின்னப்பா அவர்கள், ஸ்ரீ க. தம்பையா அவர்கள், ஸ்ரீ கா. செல்லப்பா அவர்கள், ஸ்ரீ க. சின்னப்பு அவர்கள், ஸ்ரீ ச. கந்தப்பாவர்கள் இன்னும் பலருமாம். எல்லார்மீதும் சத்தசாட்குண்ணிய திவ்யசொருபராகிய எம்பெருமான் கருணைபுரிவாராக.

82 கா. அ. தியாகராசா.

விளம்பரம்.

No. 911, N. P.—1920-ம் ஆண்டு ஆடி மாதம் 26-ந் திகதி, பிற்பகல் ஒரு மணியளவில் யாழ்ப்பாணக் கச்சேரி விற்பனவு மண்டபத்தில் வடமாகாணத்து கவண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும். அல்லது தீர்த்துவிடப்படும் அல்ல வேறு மாதிரியாகக் கையளித்தல் அல்லது கடமைப்படுதல் செய்யப்படும். 34 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாணடிஸ்திறிக்கின் கரச்சிப் பகுதியிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 4,242. குறிச்சி—இரணைமடு.

காணித்துண்டின்		விசாலம்.		
இல.	காணியின் பெயர்.	ஏ.	றூ.	ப.
1866	மகிளங்காடு	20	0	2
1865	ஷெ	20	0	6
1891	ஷெ	22	0	18
1876	முதிரங்காடு	18	2	38
1890	ஷெ	11	3	25
1878	ஷெ	19	1	14
1877	ஷெ	19	3	20
1889	ஷெ	22	3	23
1856	மகிளக்காடு	26	0	5
1857	ஷெ	19	3	38
1858	ஷெ	20	0	0
1859	ஷெ	19	2	35
1860	ஷெ	19	3	2
1861	ஷெ	19	3	1
1855	பாலைக்காடு	8	3	23
1854	ஷெ	19	0	9
1853	ஷெ	20	0	10
1852	ஷெ	20	0	0
1851	ஷெ	20	0	6
1850	ஷெ	19	3	18
1849	ஷெ	20	0	3
1848	ஷெ	20	0	3
1839	ஷெ	19	3	30
1840	ஷெ	19	3	32
1841	ஷெ	19	3	38
1842	ஷெ	20	0	8
1843	ஷெ	19	3	38
1844	ஷெ	20	0	0
1845	ஷெ	20	0	8
1362	மகிளங்காடு	18	3	13
1892	ஷெ	24	3	18
1847	பாலைக்காடு	19	0	9
1846	ஷெ	18	3	30
1893	ஷெ	16	1	1

தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 30. இக் காணிகளுக்கு கரைச்சி நீர்பாய்ச்சல் குளத்திலிருந்து தண்ணீர் பாயத்தக்கதாய்வரும். தண்ணீர் வரி வாடைக்காற்றுக்கால போகத்துக்கு ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு ரூபாவாகவும் சோழகக்காற்றுக்கால போகத்துக்கு ஏக்கர் ஒன்றுக்கு நாலு ரூபாவாகவும் அறவிடப்படும். இவ் விகிதவரிகள் ஐந்துவருடத்துக் கொருமுறை மாறுதலடையும்.

இக்காணிகளைப்பற்றி இன்னும் மேலதிக விபரங்கள் அறியவேண்டுமாகில் வடமாகாண அரசாட்சி ஏசன்றரிடமிருந்து அறிந்துகொள்ளலாம். அவைகளின் படங்களை அவைக்காரிய அத்தியக்ஷரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பீ. ஹோர்ஸ்பரோ,
அக்டிங் கலோனியல்சக்கிறத்தார்.
கொலோனியல் சக்கிறத்தாரின் கந்தோர்,
1920-ம் ஞு ஆனிமீ 8-ந் உ. (90)

விளம்பரம்.

விவேகாநந்தசபை கொழும்பு.

கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீமார். தம்பையா முதலியார் அவர்கள் தர்மசத்திரத்தில் ஞாயிறுவாரந்தோறும் சங்கீத பக்கவாத்தியங்களோடு சதாப்பிரசங்கஞ் செய்வதற்கு இயன்ற சதாப்பிரசங்கி ஒருவர் விவேகாநந்தசபைக்குத் தேவையாயிருப்பதால் விருப்பமுடையோர் கொழும்பு விவேகாநந்தசபை விசிதருக்கு கடித மூலம் நற்சாட்சிப்பத்திரம், வேண்டிய சம்பளம் முதலியனவற்றை விளக்கமாய்க் காட்டி எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ச. சோமசுந்தரம்,
சபை விசிதர்.
கொழும்பு விவேகாநந்தசபை,
61-ம் நம்பர், மேட்டுத்தெரு, 26-5-20. (65)

ஆயுள்வேத ஔஷதாலயம்.

அமிர்தசஞ்சீவி சர்பத்.

இது நன்னாரிக்கிழங்கு, பறங்கிச்சக்கை, ஐயோடையிட், ரோஜாப்பூ முதலியசஞ்சீவி சரக்குகளினால் ஆயுள்வேத முறைப்படி செய்யப்பட்டது. இரத்தத்தைச் சுத்தி பண்ணி மூளையையும் நரம்புகளையும் ஜீவதாதுவையும் பெலப்படுத்தும்; பசியை யுண்டாக்கும்; அதிக தாகத்தை அடக்கும். குண்டிக்காய், ஈரல், இரத்தாசயம், மூச்சுப்பை முதலிய இராசகருவிகளைப்பெலப்படுத்தி நன்னிலைமையில்வைக்கும். தேககாந்தியைக் கொடுக்கும்; சர்வரோகங்களை நீக்கும். ஞாபகசக்தியை மிகவும் உண்டாக்கிக் கண்ணுக் கொளியையும் குளிர்ச்சியையுங் கொடுக்கும்.

பிரமாணம்:—½ அவுன்ஸ் - போதியசுத்தசலத்தில் கலந்து சாப்பாட்டின் பின்னாவது முன்னாவது சாப்பிடலாம்.

விலை:—ஒரு முழுப்போத்தல் ரூபா 4-00.
அரைப்போத்தல் ,, 2-10.
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

கல்நார் தந்தசூரணம்.

இது பற்களைக் கெட்டிப்படுத்தி முரசை வைரச்செய்வதில் சிறந்தஅவுடதமாகிய கல்நாரிலே செய்யப்பட்டது. பற்களை வெண்மையாக்கி, பல்வலி, இரத்தம்வடிதல், முரசுகரைதல், வாய்நாற்றம் முதலிய ரோகங்களை வெகு சுலபமாக நீக்கிவிடும்.

விலை:—டப்பி ஒன்றுக்கு சதம் 50.

அயுள்வேத ஔஷதாலயம்,
பெரியகடைத்தெரு,
22. வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்:

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிப்பவர்களாகிய திருக்கோணமலை 6-ம் நம்பர் காசுக்கடைவீதி மு. தாமோதரம்பிள்ளை, இராசலிங்கம் இடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி ஷெ சட்டத்தின் 12-ம்பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டியனவாகிய நகைகளின் விபரம்.

1918-ம் ஞு தைமீ

நம்பர்.	உ.	ரூ.	ச.	அடைவுப்பொருள்விபரம்.
B 519	10	6	00	தோடு சோடி 1 [சோ.1
ஆனி				[கசிவிற் சோ.1 தோக்குச்சு
B1050	23	15		மேலீடு சோ.1 கொப்புச்சிமி
ஆடி				
B1074	2	6		சிறுமணிக்கோவை 1 பி.இ.
B1094	9	7		தோடு சோடி 1
B1124	17	6		கொப்புச் சிமிக்கி சோடி 1
ஆவணி				
C 30	10	7		சிறுதட்டுக்கிச்சி1 ஒ. இ.
C 46	14	26		டியமியுடன் பதக்கம் 1
C 47	14	12		கல்முருகு சோடி 1
C 64	17	8		சிறுசிவ.கடுக்.சோ. 1 சு. இ
C 78	22	10		குவளைமுத்து கடுக். சோ.1
C 112	29	6		முறி.குப்.கடு.சோ 1 தோக்
புரட்டாதி				[குச்சுவிற்சோடி 1
C 168	11	12	50	வளையல 7 தகடு 1 பூ இல்.
C 178	16	8		குவளைமுத்துக்கடு. சோ.1
கார்த்திகை				
C 303	7	12		வெ. கொலிசு சோடி 1
C 361	26	30		தாலிக்கொடி 1
மார்கழி				
C 392	7	8		குவளைக்கடு.சோ. 1 சு. இ.
C 405	14	16		சரடு 1 [த்த மாலை1
C 423	17	250		1/5.பிறஞ்சு பவுண் 60கோ
C 439	23	6	50	சிறு இதழ் திருகுபூ 1

விற்பனவு:—ரௌத்திரிஸு ஆனிமீ 18உ (1920-ம்ஆ ஜுலைமீ 1உ) வியாழக்கிழமை பகல் 9மணி தொடக்கம் எடுபட்டநகை தீரலாக ஷெ கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாதஉடையார்,
வெர்திஸ்மேஸ்தர்.
75

இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாளப்பெறும் மருந்துகளின் விபரம்.

1. கேர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.

இது கெர்ப்பஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சரீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்ப உற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பந் தரிக்கசெய்யுமென்பது திண்ணம்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா க.

2. தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.

இந்த அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்தபின்பே இதன் குணம் வெளியாகும்.

கஉ நாள் மருந்தின் கிரயம் ரூ உ, அணா அ.

3 பிரமேக வியாதிக்குச் சந்தனச்செந்தூரம்.

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா உ.

4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.

சரீரத்தின்எந்தஇடத்திலும் ஓடிக்குத்தும்வாய்வுகளுக்கும் மற்றையெவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தேகண்கண்டபலம். ஐந்துநிமிஷத்திற் குணமாகும்.

கச மாத்திரை புட்டி ஒன்று ரூ க, அணா அ.

5. மேகசஞ்சீவிச் சூரணம்.

மேகரோகமுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். உஉ நாள் மருந்து ரூ உ.

6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.

அன்னத்துவேஷம், பித்தக்கிறுகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஔடதம்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூ க, அணா அ.

7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்.

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும். உஉ நாள் மருந்து ரூ உ.

8 மூலிகை நந்தினத் தைலம்.

அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாவிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் ஜிலுஜிலுப்புடனிருப்பதுமன்றி ஒருவாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ 1.

9. பரிமள பற்போடி.

பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் தேய்க்காமல் முத்துப்போலிருந்து நறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.

டப்பி 1 க்கு ரூ 0-4-0 டஜன் 0 க்கு ரூ 2-12-0.

10. படர்தேக சஞ்சாரி வெண்ணெய்.

மேகரோகத்தால் தேகத்தில்விழும் எவ்வித வத்துப் படைகளையும் உ வேளையிற் குணமாக்கும்.

டப்பி க-க்கு அணா ச. டஜன் க-க்கு ரூ உ, அ. அ.

எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

தவறாதீர்கள்! இதுசமையம்!! தவறுதீர்கள்!!!

உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(அ) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்ன வயதுக்குள் இன்னவை கிட்டும் கிட்டாதெனவுங் கடிதம் கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்னவிதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(ஆ) க. ஆயுட்பாகம், உ. எந்தவிதத்திலுந் தனங்கிடைக்கும், ௩. கல்யாணம் சொர்தமா, ச. களத்திரபாகம் எத்தனை, ரு. அது முன்னு பின்னு, சா. புத்திரனுண்டா, எ. தனம் வைத்துப் போவேனு, அ. மரணமாகுமிடம் சுயதேசமா, கூ. சொந்தவீடு கிலம இட்டுமா, கO. கடன் எப்போது நிவிர்த்தியாகும், கக. வியாரமஜெயமாகுமா, கஉ. வினைத்தகாரியம முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ க.
முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.
கஉ பாகம் சார்ஜ் ரூ ரு.
பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பீ. போஸ்தில் அனுப்புவோம.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம எழுதினுத் ஜோதிஷ, வைத்திய "கியாட்லாக்" இனாமாக அனுப்புவோம.

வி. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.
K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம்,வைத்தியம்,
மேலைச் சித்திரவீதி,
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும். 11

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

☞ Printed and published by S. T. M. P. Sithambaranatha Chettiar, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.